GOKULAM

அக்டோபர் 2009 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்

# கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



# கோகுலம் சிறுவர் சங்கம்

## உறுப்பினர்கள்


1251

1252

1253

1254

1255

1256

1257

1258

1259

1260

1261

1262

1263

1264

1265

1266

1267

1268


1269

1270

1271

1272

1273

1274

1275

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

# கோகுலம்

கல்கி

அக்டோபர் 2009 மலர் : 27 இதழ் : 9


உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்

## வெளிச்சம் பரவட்டும்!



டியர் குட்டீஸ்,

புத்தாடைகள், மத்தாப்பு என்று உங்கள் நினைவுகளில் சந்தோஷம் ஊற்றெடுத்துக் கொண்டிருக்கும் தருணம் இது.

தீபாவளியைக் கொண்டாடுகின்ற இந்த சந்தோஷத்தில், நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றும் இருக்கிறது.

மக்களைத் துன்புறுத்திய நரகாசுரன் என்கிற அசுரனை கிருஷ்ணன் கொன்றான். அதன் நினைவாகவே தீபாவளி கொண்டாடப்படுவதாக இந்தப் பண்டிகைக்கான காரணம் பற்றிச் சொல்வார்கள்.

காரணமல்ல; அதன் மூலம் உணர்த்தப்படும் விஷயம்தான் நமக்கு முக்கியம்.


பிறரை கடுஞ்சொல்லால் பேசுவது; துன்புறுத்துவது... போன்றவைதான் அசுரத்தன்மை. அந்த அசுரத்தன்மைக்கு எதிரானது. அன்புநிலை!

அசுரத்தன்மை இருள்; அன்பு நிலை ஒளி!

அதனால்தான், 'அன்பின் வழியது உயிர்நிலை' என்றார் வள்ளுவர் பெருமான். அத்தகைய அன்பு, நம்முள் நிறையட்டும்; திசையெங்கும் வெளிச்சமாய்ப் பரவட்டும்! இந்தக் தீபாவளி திருநாளில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய உட்பொருள் இதுதான்!

*அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!*

அன்புடன்,
**கோகு**



சுகுணா

# பேசத் தெரியாத

தமிழாசிரியர் கந்தசாமி சொற்சிலம்பம் ஆடுவதில் வல்லவர். அதனால் மாணவர்கள் அவர் பேசப் பேச உற்சாகமாய் கொண்டாடுவார்கள். ஒரு நாள் வகுப்பறையில், பாடம் நடத்திக் கொண்டிருந்தார் அவர்.

''தம்பிகளா, நாம் பேசுவது தமிழ்தான். படிப்பதும் தமிழ்தான். அதனால் நமக்கு தமிழறிவு இருக்கிறது என்று பொருளில்லை''

அவர் முடிக்கும் முன்பாக, ஆனந்தன் எழுந்து கேட்டான்.

''ஐயா, தங்களைப் போன்றவர்கள் இருக்கும்போது, அதை எப்படி ஒப்புக் கொள்வது?''

''ஆனந்தா, பொதுவாகத்தான் சொல்கிறேன். நான் கேட்கும் கேள்விகளுக்கு உங்களால் பதில் சொல்ல முடிகிறதா பார்க்கலாம்'' என்றவர் கேட்டார்.

''பாடாத கந்தருவம்?''

மாணவர்கள் விழித்தனர். அவரும் அடுத்தடுத்து கேள்வி எழுப்பினார்.

''எறியாத கந்துகம்?''

''பத்திக் கோணாத கோணம்?''

''பறவாத கொக்கு.''

மௌனமாய் இருந்த ஆனந்தன், இதற்கு பதில் சொன்னான். ''இறந்த கொக்கு!''

சிரித்தபடியே அதை மறுத்த ஆசிரியர் தொடர்ந்தார்.

''அனல் பண்ணாத கோடை?''

''வெம்படையாய் தொடாத குந்தம்?''

ஏடாயிரம் கோடி எழுதாது தன் மனத்து எழுதிப் படித்த விரகன்
எதுசொலினும் அதுவே எனச்சொலும் கவிவீர ராகவன் விடுக்கும்ஓலை
சேடாதிபன் சிரம் அசைத்திடும் புகழ்பெற்ற திரிப தகை குல சேகரன்
தென்பாலை சேலம் புரந்து தாகம் தீர்க்கும் செழியன் எதிர்கொண்டு காண்க.
பாடாத கந்தருவம்; எறியாத கந்துகம்; பத்திக் கோணாத கோணம்.
பறவாத கொக்கு; அனல் பண்ணாத கோடை; வெம் படையாய் தொடாத குந்தம்;
சூடாத பாடலம்; பூவாத மா; தொடை தொடுத்து முடியாத சடிலம்;
சொன்ன சொல் சொல்லாத கிள்ளை ஒன்றெங்கும் துதிக்கவர விடல் வேணுமே!

- அந்தகக் கவி வீரராகவர்

## தமிழமுது

''சூடாத பாடலம்?''

''பூவாத மா?''

மீண்டும் ஆனந்தன் எழுந்து சொன்னான். ''காய்ந்து போன மாமரம்''

மாணவர்கள் சிரிக்க, ஆசிரியர் மறுத்தபடியே தொடர்ந்தார். ''மலர் சூட முடியாத சடிலம்?''

''சொன்ன சொல் சொல்லாத கிள்ளை!''




இதற்கும் பதில் சொல்ல நினைத்தான் ஆனந்தன். 'பேசத் தெரியாத கிளி' என்று தொண்டை வரை வந்த பதிலை அடக்கிக் கொண்டான். ஆசிரியரையே கவனித்தான்.

''தம்பிகளா! நான் சொன்ன வார்த்தைகளுக்கு இசை, பந்து, வாள், பறவை, வேனில், பாதிரி மலர்; மாமரம், சடை, கிளி என்று வேறு பொருள் உண்டு. ஆனால், குதிரை என்றும் பொருள்படும். கந்தருவம் என்றால் இசை. இசைக்காத கந்தருவம் என்னும்போது குதிரை. அப்படித்தான் ஒவ்வொரு சொல்லும் குதிரை என்று குறிப்பிடுகின்றன.

நமக்கு மொழியறிவு இருக்கிறது என்று சொன்னால், இப்படி ஒரு பொருளைக் குறிப்பிடும் பல சொற்களைப் பற்றிய அறிவும், அவற்றை பயன்படுத்தும் முறை பற்றிய தெளிவும் வேண்டும்.

நீங்கள் பெறும் மதிப்பெண்கள், உங்கள் படிப்பறிவை காட்டுகின்றன. ஆனால், உங்களின் எழுத்தும் பேச்சும் உங்கள் மொழியறிவை உணர்த்துகின்றன. மொழியறிவு பெருக வழி, நல்ல நூல்களை தேடிப் படிப்பதுதான்!''

தமிழாசிரியர் சொன்னதும், ஆனந்தன் எழுந்து குறும்புடன் கேட்டான்.

''நல்ல நூல்கள் எவை சார்?''

தமிழாசிரியர் பளிச்சென்று சொன்னார்.

''தைக்கும்போது அறுகாத நூல் எதுவோ, அவையெல்லாம் நல்ல நூல்தான்.'' மாணவர்கள் கலகலவென்று நகைத்தார்கள். ●


கல்கி
கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!

# பத்திரமாய்க் கொண்டாடுவோம்!

**ராகவன்**

பண்டிகைகள் அனைத்துமே ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் அளிப்பவைதான். புத்தாடை உடுப்பது, வழிபாடு செய்வது, உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று பரிசுகள், இனிப்புகள் வழங்குவது... என்று அன்பையும், உறவையும் மேம்படுத்துபவை பண்டிகைகள்.

இந்தப் பண்டிகைகளில், தீபாவளிக்கு ஒரு தனித்தன்மை உண்டு. இந்தியா முழுவதும் ஒட்டு மொத்தமாகக் கொண்டாடப்படுவது இந்தப் பண்டிகை. வட இந்தியாவில் ராம் லீலா என்று இந்த விழாவைக் கொண்டாடுவார்கள். வீடுகளில் வரிசையாக விளக்குகளை ஏற்றி வைப்பார்கள்.

வங்காளத்தில் 'மகா நிசா' என்ற பெயரில் தீபாவளி கொண்டாடப்படுகிறது. அன்று, காளி தேவியை வழிபடுவார்கள். விசேஷமாக, லக்ஷ்மி பூஜை செய்யும் பழக்கம் சில பகுதிகளில் உண்டு. பௌத்த, சமண சமயத்தவர்களும் இந்த தீபாவளியைத் திருநாளாகக் கொண்டாடுவதுண்டு. மற்ற திருநாட்களுக்கு இல்லாத இன்னொரு சிறப்பு, பட்டாசு!





## கவர் ஸ்டோரி

தீபாவளியன்று திசையெங்கும் வெடிச் சத்தமும், ஒளி வெள்ளமும் பரவிக் கிடப்பதைக் காண்கிறோம். இருள் பிரியாத அதிகாலை வேளையில் எழுந்து நீராடி, மத்தாப்பு கொளுத்துவதிலும், சக்கரங்களை விடுவதிலும் ஆபத்து ஏதுமில்லை. ஆனால், ராக்கெட், வெடிகள், ஆட்டம்பாம்... போன்ற வெடிகளைப் பயன்படுத்தும்போது மிகுந்த எச்சரிக்கை வேண்டும்.

நம்முடைய பாதுகாப்பு மட்டுமல்ல; தெருவில் நடந்து செல்பவர்கள், அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளில் உள்ளவர்கள், கூரை வீடுகள் என்று யாருக்கும், எதற்கும் வெடிகளால் எந்த ஆபத்தும் வந்துவிடக்கூடாது.

வெடி வெடிப்பதால் சந்தோஷமில்லை. அதிலிருந்து வரும் ஒளிதான் மகிழ்ச்சி. அப்படி ஒளியை உமிழும் மத்தாப்புகளை பயன்படுத்தி வெடிகளை தவிர்க்கலாம். நம்முடைய சந்தோஷத்தை வெளிப்படுத்துவது என்பது, மற்றவர்களுக்கு துன்பம் தராத முறையில் அமைய வேண்டும்.

பண்டிகைகளின் நோக்கம், அனைவரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையை உணர்ந்து, நமக்கு மட்டுமல்ல; எவருக்கும் எவ்விதமான துன்பமும் நேராதபடி, பண்டிகையை பத்திரமாய் கொண்டாட வேண்டும்.

அதுதான் சந்தோஷம்; அதுதான் நிறைவளிப்பதும்கூட! ●



அட்டையில்: ஸ்வேதா
வண்ணப்படம்: ஆர். கண்ணன் கடலூர்

# வானவில்!

ரவியும், வினோத்தும் சகோதரர்கள். ரவி பத்தாம் வகுப்பும், வினோத் ஆறாம் வகுப்பும் படிக்கின்றனர். இருவரும் படிப்பில் படுசுட்டி. ரவி எப்பொழுதும் ஏதாவது ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டே இருப்பான். எங்கே 'வினாடி - வினா' போட்டிகள் நடத்தப்பட்டாலும், ரவி அதில் கலந்துகொண்டு பரிசுகளைப் பெற்று வருவான்.


ஆனால், வினோத் பாடப் புத்தகங்களை மட்டும்தான் படிப்பான். இருப்பினும் வினோத்துக்கு ஓவியங்கள் வரைவதில் அதிகம் ஈடுபாடு உண்டு. அதனால்தான் சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ஓவியப்போட்டியில் மாவட்ட அளவில் முதல் பரிசை பெற்றுள்ளான்.



ரவியும், வினோத்தும் சில சமயங்களில் சின்னச் சின்ன சண்டைகள் போட்டாலும், கடைசியில் ரவி வினோத்தை சமாதானம் செய்து விடுவான்.

ரவிக்கு பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு ஆரம்பமானது. அதனால் தனியறையில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது பள்ளியிலிருந்து வீடு திரும்பிய வினோத் ரவியிடம் சென்று,

''அண்ணா, நான் மாநில அளவில் நடைபெறப் போகின்ற ஓவியப் போட்டி




**குழந்தைக் கவிஞர்**
**அழ. வள்ளியப்பா**
**நினைவுச்சிறுகதைப்**
**போட்டியில்**
## முதல் பரிசு
## ரூ.1000/-
**பெறும் சிறுகதை**

யில் கலந்துகொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. தலைப்பு என்ன தெரியுமா? 'வானவில்' தமிழ்நாடு முழுக்க மொத்தம் முப்பத்தெட்டு பேர் கலந்துக் கொள்கிறார்கள். அவர்களில் குட்டிப்பையன் நான் மட்டும்தானாம். இன்றிலிருந்து ஏழாவது நாள் ஓவியப்போட்டியில் கலந்துகொள்ள வேண்டும். எனக்காக 'வானவில்' பற்றி ஏதாவது தகவல் சொல்லு அண்ணா!'' - என்றான்.

அதைக் கேட்டபடியே வந்த அப்பாவும் அம்மாவும்,

''வினோத், அண்ணாவுக்கு 'தேர்வு' இருக்கு. தொந்தரவு பண்ணக்கூடாது'' என்றனர். வினோத்தும் 'சரிம்மா' என்றபடி சோர்வாய் படுக்கைக்குச் சென்றான்.

ஆறு நாட்களுக்குப் பிறகு... ரவிக்கு தேர்வுகள் எல்லாம் முடிந்துவிட்






**மு.அருண்குமார்.**
உ.எண்: 670 .
பன்னிரண்டாம் வகுப்பு,
ஆர்.வி.அரசு ஆண்கள்
மேனிலைப்பள்ளி,
ஓசூர்.

டன. வினோத்தை பள்ளியிலிருந்து கூட்டி வர, ரவி கிளம்பினான். பேருந்தி விருந்து கவலையுடன் இறங்கினான் வினோத் . இருவரும் வீட்டை நோக்கி மண்பாதையில் நடக்கத் தொடங்கினர். சுற்றிலும் இருள் பரவத் தொடங்க, வானத்தில் தோன்றியிருந்த முழுநிலவு அதனை விரட்டியது. ரவி வினோத் திடம்,

''மன்னிச்சுடு வினோத், எனக்குத் தேர்வுகள் இருந்ததால், உனக்கு உதவி செய்ய முடியவில்லை. நாளைக்கு ஓவி யப்போட்டிக்கு தயார் ஆகிவிட்டாயா?'' என்றான்.

அதற்கு வினோத், ''இல்லை, எனக்கு வரையத் தோணலை. ஏன்னா இதுவரை நான் வானவில்லையே பார்த்ததில் லையே! இதில் நான் வெற்றிபெற மாட்டேன். பயமா இருக்கு'' என்றான் கவலையாய்.

''வினோத், பயப்படாதே! நம்பிக்கை யோடு இருந்தால் கடைசி நிமிடத்தில் கூட வெற்றி கிடைக்கும்'' என்றான் ரவி.

- அப்பொழுதுதான் அந்த அதிசயம் நிகழத் தொடங்கியது...

மறுநாள்...

ஓவியப்போட்டி நடந்து முடிந்திருந் தது. அரங்கத்தில் இருந்த நாற்காலிகள் அனைத்திலும் மாணவர்களும், பெற் றோர்களும் அமர்ந்திருந்தனர். சரியாக அரைமணி நேரம் கழித்து, ஓவியப் போட்டியின் முடிவை அறிவிப்பதாகக் கூறிய நடுவர்கள் நான்கு பேரும் தனியறைக்குச் சென்றனர்.

ஒவ்வொரு ஓவியமாகப் பார்த்துக் கொண்டே வந்தவர்களுக்கு ஒரு மிகப் பெரிய வியப்பு காத்திருந்தது. அபூர்வ மான ஒரு ஓவியமும், கீழே அதற்கான தகவலும் எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்துப் பார்த்தவர்கள் மேலும் வியந்தார்கள்.

அரைமணி நேரம் கழித்து, விழா மேடையில் சிறப்பு விருந்தினர் பேசத் தொடங்கினார்.

''இந்த ஓவியப்போட்டிக்கு கொடுக் கப்பட்ட தலைப்பு 'வானவில்' இதனால் பெரும்பாலானோர் காடுகள், மலைகள், கோட்டைகள் இவற்றின்மேல் வானவில் தோன்றியதுபோல் வரைந்திருந்தனர்.



ஆனால் ஒரு சிறுவன் முற்றிலும் மாறு பட்ட ஒரு இடத்தில் வானவில் தோன்று வது போலவும், அதற்கான தகவலையும் தந்திருந்தான். இணையதளத்தில் ஆராய்ந்தபோது அந்தத் தகவல் நூறு சதவிகித உண்மையென்று தெரிந்தது. எனவே அந்தச் சிறுவன் மாநில அள வில் முதல் பரிசை தட்டிச் செல்கின்றான். அந்தச் சிறுவனின் பெயர் 'வினோத்'.''

அரங்கத்தில் கரவொலி எழும்ப, வினோத் மேடைக்குச் சென்றான். ரவியும், அவனது பெற்றோரும்

மகிழ்ந்தனர்.

சிறப்பு விருந்தினர் வினோத்தின் கழுத்தில் தங்கப் பதக்கத்தை அணி வித்து, கையில் சான்றிதழையும் தந்தார். பின் அவனைப் பேசுமாறு பணித்தார். வினோத் பேச ஆரம்பித்தான்.

''இந்த வெற்றிக்குக் காரணம் என் அண்ணா ரவிதான்.

பள்ளியிலிருந்து வீடு திரும்பும்போது இருட்டிவிட்டது. இருவரும் நிலவொளி யில் பேசியபடியே சென்றோம். அப்




போது திடீரென மழைத்தூறல் போடத் தொடங்கியது. ஓடிச்சென்று ஒரு கட்ட டத்தின் வெளியே நின்றோம். பத்து நிமி டங்களுக்குப் பிறகு மழைத்தூறல் நின் றது. அப்போது ரவி, என் கண்களை தன் கைகளால் மூடி நிலவுக்கு எதிர் திசையில் திரும்பி நிற்க வைத்தபடி சொன்னான்.

''இப்போ உன் கண்களைத் திறந்து வானத்தைப் பார்!''

நான் வானத்தைப் பார்த்து பிர மித்துப் போனேன்.

அந்த இரவு நேர வானத்தில் சிதறிக் கிடக்கும் விண்மீன்களின் ஊடே வான வில் தோன்றியிருந்தது. முதலில் சிவப்பு பின் வரிசையாய் ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா என ஏழு வண்ணங்களுடன் அரைவட்டமாய் வானவில் பிரகாசித்தது. பார்க்கவே மிகவும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதனை வியந்தபடியே,

''அண்ணா, இரவு நேரங்களில் வானவில் தோன்றுமா?'' என்றேன்.

அதற்கு ரவி, ''ஆமாம், வினோத்! முழுநிலவு வானத்தில் இருக்கும் நேரத் தில் மழைத்தூறல் பெய்தபிறகு, நில வுக்கு எதிர்திசையில் வானவில் தோன் றும். இது எப்பொழுதாவது மிகவும் அரிதாக நிகழும். மேலும் வானவில் தோன்றி மறைவதற்கு மூன்று நிமிடங்கள் தான் எடுத்துக் கொள்கிறது'' என்றான்.

''இயற்கை நமது கற்பனைக்கும் எட் டாத பல அதிசயங்களைக் கொண்டது. அதில் ஒன்றுதான் இந்த 'இரவு நேர வானவில்'. இதனை ஓவியப்போட்டி யில் வரைந்து, இந்தத் தகவலையும் எழுது. நிச்சயம் முதல் பரிசு உனக்குத் தான்'' என்றான் ரவி. இது உண்மை யாகிவிட்டது.''

உணர்ச்சி மயமாகப் பேசினான் வினோத். கேட்ட சிறப்பு விருந்தினர் ரவியை மேடைக்கு அழைத்துப் பாராட் டினார்; இரண்டாயிரம் பக்கங்கள் கொண்ட Encyclopaedia என்றழைக்கப் படும் 'உலகப் பொது அறிவு' நூலை பரிசாக வழங்கினர்.

அரங்கமே அதிரும் வண்ணம் கர வொலி எழுந்தது. கூட்டத்தில் நின்று கொண்டிருந்த அவர்களின் பெற்றோரின் கண்களில் இருந்து ஆனந்தம் நீராக வழிந்தது. ●

# மனதில் நிற்கும்

சரித்திரத்தில் நாம் எத்தனையோ மன்னர்களைப் பற்றிப் படிக்கிறோம். ஆனால் ஒரு சிலர் மட்டுமே, வரலாற்றில் தனி இடம் பிடித்துள்ளனர். அப்படிச் சிலரை இங்கே பார்க்கலாம்.

● பாபிலோனியாவை கி.மு. 1795 முதல் சுமார் அரை நூற்றாண்டு காலம் ஆட்சி செய்தவர் ஹம்முராபி. இவர் பல நாடுகளை வென்று பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கினார். ஆனால் சரித்திரம் அவரை வீரராக மட்டுமின்றி, மிகச் சிறந்த பேரரசராகவும் பார்க்கிறது. தம் ஆட்சிக்காலத்தில் ஏராளமான நீர்ப்பாசனக் கால்வாய்களை வெட்டியதுடன், பல கோவில்களையும் கட்டினார். போக்குவரத்துக்கு வசதியாக சாலைகள் அமைத்தார். பிரஜைகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அப்படி நடந்து கொள்ளாவிட்டால் என்ன தண்டனை? போன்ற கட்டளைகளை எழுத்து பூர்வமாக உருவாக்கியவர் ஹம்முராபி. இன்றுள்ள நவீன சட்டதிட்டங்களுக்கு முன்னோடியாக ஹம்முராபியை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். கடந்த நூற்றாண்டில், பிரெஞ்ச் தொல்பொருள் ஆய்வாளர்கள், பண்டைய பாபிலோனியப் பகுதியில் ஹம்முராபியில் அகழ்வாராய்ச்சி நடத்திய போது இதைக் கண்டுபிடித்தார்கள்.

● இரண்டாம் பிலிப்பின் மகனாகப் பிறந்து, தத்துவ மேதை அரிஸ்டாட்டிலால் உருவாக்கப்பட்டவர் அலெக்சாண்டர். தன் தந்தையை அடுத்து பட்டத்துக்கு வந்த போது அவருக்கு வயது 20தான். அவர் ஆட்சி செய்தது பதிமூன்று ஆண்டுகளே என்றாலும், சரித்திரம் போற்றும் ஒரு மாவீரனாக விளங்கினார். கிரீஸ், எகிப்து, பாரசீகம் என்று தொடங்கி இந்தியாவில் கங்கைக் கரை வரை அவர் கால் பதித்தார். இந்தக் காலத்தில் அவரது சாம்ராஜ்ஜியம் அவர் பட்டத்துக்கு வந்த



★ செங்கிஸ்கான்



★ ஹம்முராபி

கௌதம்ராம்

# மாவீரர்கள்!

போது இருந்த நிலப்பரப்பைப் போல ஐம்பது மடங்கு விரிவடைந்தது.

அவர் நிறுவிய புதிய நகரம், அவரது பெயரிலேயே 'அலெக்சாண்டிரியா' என அழைக்கப்பட்டது. இன்றளவும் அலெக்சாண்டரை ஒரு மாமன்னராக சரித்திரம் போற்றுகிறது.

● உலக மாமன்னர்களுக்கு இணையாக குறிப்பிடப்படும் இந்திய மன்னர் அசோகர். சமஸ்கிருதத்தில் அசோகா என்ற வார்த்தைக்கு 'கவலைகள் இல்லாத' என்று பொருள். சந்திர குப்த மௌரியரின் பேரனும், பிந்துசாரரின் மகனுமான அசோகர், கி.மு. 273 முதல் 232 வரையிலான காலகட்டத்தில் மகத சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கினார். இன்றைய இந்தியாவின் தென் பகுதி தவிர, ஒட்டுமொத்த நிலப்பரப்பும் அவரது ஆட்சிக்குட்பட்டிருந்தது. வடக்கே ஆப்கானிஸ்தான் வரை அவரது சாம்ராஜ்ஜியம் இருந்தது. தன் ஆட்சிக் காலத்தில் பல போர்களில் வென்று நாடுகளைக் கைப்பற்றினாலும், கலிங்கப் போரின்போது ஏற்பட்ட உயிரிழப்புகளும், இதர கொடுமைகளும், அசோகரின் மனதைப் பெரிதும் பாதித்தன. அதன் காரணமாக இனி போரிடுவதில்லை என்ற முடிவுக்கு வந்ததுடன், அமைதியையும், சமாதானத்தையும் போதிக்கும் பௌத்த மதத்தைத் தழுவினார். அடுத்த 30 ஆண்டுகள் அவர் தன் நாட்டு மக்களின் நல்வாழ்விலும், பௌத்த மதத்தைப் பரப்புவதிலும் மட்டுமே கவனம் செலுத்தினார். அதனால் 'தேவனாம் பிரியர் (இறைவனுக்கு மிகவும் பிரியமானவர்) என்றும், பிரிய தர்சி (அனைவர் மீதும் சமமாக அன்பு செலுத்துபவர்) என்றும் போற்றப்பட்டார்.

● ரோமானியப் பேரரசரான ஜூலியஸ் சீசர் சரித்திரம் போற்றும் ஒரு மாமன்னர். ஆங்கில மாதங்களில் ஜூலை மாதம் இவரைப் போற்றும் வகையில் பெயரிடப்பட்டது. செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்த சீசர், ரோமானிய ராணுவத்தில் சேர்ந்து ஆசியப் பகுதிகளில் பணியாற்றி, பெயரும் புகழும் பெற்றார். தன் 43வது வயதில், அவர் ரோமானியக் குடியரசின் ஆட்சி மன்றக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜெர்மனி, ஃபிரான்ஸ், பெல்ஜியம், பிரிட்டன் போன்ற நாடுகளின் மீது படையெடுத்து வென்று தன் சாம்ராஜ்ஜியத்தை விரிவு படுத்தினார். பின்னர் ரோமானிய சாம்ராஜ்ஜியத்தின் தலைமைப் பொறுப்பேற்று ஆட்சிமுறை, சட்டதிட்டங்கள் ஆகியவற்றில் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் நாட்டின் தொழில், வியாபாரம், இலக்கியம் ஆகியவை வளர்ச்சி கண்டன.



★ அசோகர்

● தன் தந்தைக்குப் பிறகு மங்கோலியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தேமுஜினுக்கு வயது 13. அதிரடியாக அண்டை நாடுகளை வென்று தன் பெயரை 'செங்கிஸ்கான்' ( அபாரமான ஆட்சியாளர்) என்று மாற்றிக் கொண்டார். செங்கிஸ்கானின் குதிரைப்படை பெரும் பலம் வாய்ந்த ஒன்றாக விலங்கியது. அதனால்தான் அவரால் சீனப் பெருஞ் சுவரைத் கடந்துச் சென்று சீனாவின் பெரும்பகுதியை கைப்பற்ற முடிந்தது. தொடர்ந்து பாரசீகம், ருஷ்யா, போலந்து, ஹங்கேரி வரை கைப்பற்றி, ஐரோப்பிய நாடுகளுக்கே பெரும் சவாலாக விளங்கினார். உலக சரித்திரத்தில் ஒரு மாபெரும் சக்ரவர்த்தியாக செங்கிஸ்கான் குறிப்பிடப் படுகிறார். ஆனால், செங்கிஸ்கானுக்குப் பிறகு, அவரது சாம்ராஜ்ஜியம் வீழ்ந்தது.

● மொகலாயச் சக்ரவர்த்திகளுள் குறிப்பிடத் தக்கவர் அக்பர். 1556 முதல் 1605 வரை ஆட்சி செய்த இவருக்கு அரியணை ஏறியபோது 13 வயது. அவருடைய நம்பிக்கைக்குரியவராக இருந்த தளபதி பைராம் கான், உரிய வயது வரும் வரை ஆட்சியை கவனித்துக் கொண்டிருந்தார். இலக்கியம், இசை மற்றும் பல்வேறு கலைகளிலும் ஆர்வம் கொண்டிருந்த அக்பர் ஆட்சிக்கு வந்தவுடன், மிகச் சிறந்த ஆட்சியாளராக தன்னை நிலைநாட்டிக் கொண்டார். படைபலத்தால் நாடுகளை வென்று மாவீரராக விளங்கிய அக்பர், அனைத்து மக்களின் நலன்களையும் பாதுகாத்தார். அதன் அடையாளமாக, முஸ்லிம் அல்லாதவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த ஜசியா வரியை ரத்து செய்தார். கலைப் பொருட்களை சேகரிப்பதில் அக்பர் பெரும் ஆர்வம் கொண்டவராக இருந்தார். அவரது ஆட்சியின்போது இலக்கியங்கள் செழித்தன. அவற்றுள் முக்கியமானவை, அக்பர் நாமாவும், அயினி அக்பரியும் ஆகும்.

★ அலெக்சாண்டர்



● பிரான்ஸ் நாட்டு வரலாற்றின் மாவீரனாக போற்றப்படுபவர் நெப்போலியன் போனபார்ட். 1769ல் பிறந்து, பிரான்ஸ் நாட்டு ராணுவப் பள்ளியில் பயின்ற நெப்போலியன் 1785ல் பிரெஞ்ச் ராணுவத்தில் சேர்ந்தார். பிரெஞ்ச் ராணுவம், 1793ல் பிரிட்டிஷ் ராணுவத்தை தோற்கடித்ததிலும், அதனையடுத்து ஆஸ்திரியா, இத்தாலி, எகிப்து, ஜெருசலேம் ஆகியவற்றின் மீது போர் தொடுத்து வெற்றி பெற்றதிலும் நெப்போலியனுக்கு பெரும் பங்கு உண்டு. இதனால் நெப்போலியனின் புகழ் உச்சத்தை அடைந்தது. அதன் காரணமாக 1804-ல் பிரான்ஸ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை நெப்போலியன் ஏற்றுக் கொண்டார். அடுத்த சில ஆண்டுகளில் அந்த சாம்ராஜ்ஜியம் விரிவடைந்தது. 1812ல் ருஷ்யாவுடனான போரில் தோல்வியை சந்திக்க நேரிட்டது. அதன் பிறகு வாட்டர்லூ போரில் ஏற்பட்ட தோல்வி வரை நெப்போலியனுக்கு இறங்குமுகம்தான். ஆனாலும், நெப்போலியனை மாவீரனாக சரித்திரம் போற்றுகிறது. ●

# 'ஒளிந்திருக்கும் உண்மைகள்' போட்டி முடிவு!



'**த**ம்ளரை விட, டபராவில் ஊற்றப்பட்டுள்ள காஃபி அல்லது டீ சீக்கிரம் ஆறிவிடுவது ஏன்?'

ஜூலை மாதம் வெளியான, 'ஒளிந்திருக்கும் உண்மைகள்' போட்டிக்கான கேள்வி இது.

நம்ம குட்டீஸ் சுறுசுறுப்பா விடையெழுதிக் குவித்துவிட்டார்கள். பெரும்பாலானவர்கள் மிகச் சரியான பதிலை எழுதியிருந்தார்கள் என்பது இன்னமும் சிறப்பு! அதனால் சரியான விடை எழுதியவர்களைத் தேர்ந்தெடுக்கக் கொஞ்சம் தாமதமாகிவிட்டது.

சரியான பதில் :

**தம்ளரை விட, டபராவில் உள்ள காஃபி அல்லது டீயில், காற்று செயல்படக்கூடிய புறப்பரப்பு அதிகம். அதனால் வெப்பம் விரைவில் பரவி வெளியேற, டபராவில் உள்ள காஃபியும் விரைவில் ஆறிவிடுகிறது.**

குலுக்கலில் தேர்வாகிப் பரிசு பெறுவோர் விவரம் இதோ :

1) ஜி.நத்தானியேல் நவீன் ராஜ், உ. எண் : 39, செங்கல்பட்டு

2) சி.அர்ஜுன், உ. எண் 1149, சிதம்பரம்

3) செ.விவேக், உ.எண் 288, திண்டுக்கல்

4) மம்தா மணிமாறன், உ. எண் 121, திருநெல்வேலி

5) கே.கவிதா, உ. எண் 127, ஆற்காடு

இவர்கள் அனைவருக்கும் புத்தகங்கள் பரிசாக அனுப்பப்படுகின்றன. பரிசு பெற்ற ஐவருக்கும் பாராட்டுக்கள்; பங்கேற்ற அனைவருக்கும் வாழ்த்துகள்!


# கல் வைத்த மோதிரம்!

கதை: டி. ஜானகி
படம்: பிள்ளை





ஒருநாள் பழக்கடையில்...
ஆ, திராட்சை! யாரும் பார்க்கலை. தட்டி விடுவோம்.
அதைப் பார்த்த முயல்...
இப்படித் திருட்டுத்தனம் செய்யலாமா?
நானா? திருடினேனா? எதை?
இருக்காது முத்து. பழம் தானா விழுந்திருக்கும்.
இரு... உன் ஏமாத்து வேலையை உணர வைக்கிறேன்.
சில நாட்களுக்குப்பின்...
அட! நீலக் கல் மோதிரம். அதை அபேஸ் செய்யணும்.
இந்தா வாழைப்பழம் மிட்டாய், பலூன்...
குரங்கு வாங்கும்போது...
...மோதிரத்தை கழற்றிய நரி...
இங்கே இருக்கட்டும். அப்புறம் எடுத்துக்கலாம்.
அதைக் கவனித்த முத்து...
கோழியிடம் சென்று...
பச்சைக் கல் மோதிர ஒண்ணு த
இந்தா.
ஐஸ்கிரீம் விற்கும் ஜிம்மியிடம்...
எனக்கொரு உதவி செய்யணும்.
சொல்லு.
ICE


மெல்லிய குரலில் சொல்ல...
சரி, நீ போ. நான் பார்த்துக்கறேன்.
ஓ.கே.
ஜிம்மி நீலுவிடம்...
உனக்கு பிடிக்குமே. இந்தா ஐஸ் சாப்பிடு.
நிஜமாவா சொல்ற?
ICE
நரி எழுந்து செல்ல...
ஓடிச் சென்ற முத்து மோதிரத்தை மாற்றி வைக்க...
அப்போது வந்த நீலு...
ஏய், என்னோட மோதிரத்தைக் கொடு.
இல்லை. இது என் மோதிரம்.
அதை கவனித்த யானை
என்ன கூச்சல்?
என் மோதிரத்தை திருடிட்டான்.
எது உன்னோட மோதிரம்.
நீலக் கல் வைத்த இந்த மோதிரம்.
அப்ப குருடன் மாதிரி இதுவரை நடித்தாயா?
சாரி, ஏமாத்தினது தப்புதான். இனிமே இப்படி பண்ண மாட்டேன். மன்னிச்சுடுங்க.




தேடிவரும் கோகுலம்;
படிக்கப்
படிக்க...
கோகுலம்!

உலகப் புகழ்பெற்ற ஓவியம் மோனோலிசா. இதை ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற 'ராக்ஸ் அரோமா' திருவிழாவில், புதுமையான முறையில் வரைந்துள்ளனர். 20 அடி உயரத்தில் 13 அடி அகலத்தில். எப்படித் தெரியுமா? மொத்தம் 3,604 காபி கப்புகளை அடுக்கி வைத்து, படம் தெளிவாக வருவதற்கு ஏற்ற மாதிரி சுமார் 282 லிட்டர் பாலைப் பயன்படுத்திக் காபியைக் கலந்து வைச்சிருக்காங்க. இதை மொத்தம் எட்டு பேர் கொண்ட குழு, மூன்று மணி நேர உழைப்பால் கொண்டு வந்திருக்காங்க.

**ஊனமுற்றோருக்கு உதவும் ரோபோ கால்கள் :**

நடக்க முடியாத உடல் குறைபாடு கொண்டவர்களையும், ''ரோபோ உடை''யைப் பொருத்திக் கொண்டு, ஒழுங்காக நடக்க வைக்க முடியும் என நிரூபித்துக் காட்டியுள்ளனர் ஜப்பானியர்கள். ரோபோ செயல்பாட்டில் இயக்கும் அந்த உடையின் பெயர் 'எச்.ஏ.எல்.' ஆகும். இதன் எடை சுமார் 23 கிலோ. இதில் ரோபோ செயல்பாட்டில் இயங்கும் செயற்கைக் கால்கள், பேட்டரி மற்றும் கணினி அமைப்புகளும் உள்ளன. பெருந்தொகை கொடுத்து இந்த உடையை வாங்க முடியாதவர்கள், வாடகைக்கு எடுத்தும் பயன்படுத்திக் கொள்ளலாம் என நிறுவனம் அறிவித்துள்ளது.








# காபியில்

**மிகப் பெரிய நீர்க்குமிழி**

குழந்தைகள் வீட்டில் சிறிய நீர்க்குமிழிகளை உருவாக்கி வானில் பறக்க விட்டு மகிழ்வதைப் பார்த்திருப்போம். ஆனால், இலண்டனில் பிறந்த, 'சாம் ஹீத்'

**முனைவர். ஆசுரா**




என்பவர் மனிதர்களை விட மிகப் பெரிய நீர்க்குமிழிகளை உருவாக்கிச் சாதனை படைத்து வருகிறார். அதற்காகவே பெரிய நீர்க்குமிழிகளை உருவாக்குவதற்குத் தேவையான 'இரகசிய கலவை'யைக் கண்டுபிடித்துள்ளார். பல வண்ணங்களில் உருவாக்கும் மிகப் பெரிய நீர்க்குமிழிக்கு அவர் பயன்படுத்துவது இரண்டு குச்சி களும் அவற்றை இணைக்கும் கயிறும் தான். கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெறுவதற்காக அவர் அமெரிக்கா வின் மின்னசோடா மாகாணத்தில் உருவாக்கிய நீர்க் குமிழியின் அளவு 105.4 கன அடி ஆகும்.

# மோனலிசா!

### மூளையே இல்லையா?

கோபத்தில், "உங்களுக்கு மூளையே இல்லையா?" எனக் கேட்பதைக் கேட் டிருக்கின்றோம். "நான் செயற்கை மூளை வாங்கி வைச்சுக்குறேன்" என்னும் பதிலை இனி தைரியமாகச் சொல்லலாம். ஆக்ஸ் போர்டில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய, 'பேராசிரியர் ஹென்றி மார்க்ராம்' 'எலியின் மூளையில் உள்ள கூறுகளின் மாதிரிகளை உருவாக்கிவிட்டோம். இன் னும் பத்து ஆண்டுகளில் மனித மூளை செயற்கையாக உருவாக்கப்படும்'' என் றும் தெரிவித்துள்ளார். 'நீல மூளைத் திட்ட'த்தின் உறுப்பினரான இவர், ''செயற்கை மூளைத் திட்டத்தின் மூலம் மனநல நோயாளிகளுக்காகப் புதிய சிகிச்சைகளை உருவாக்க முடியும் என்றும், இதற்கு உதவும் பின்னணியில் சூப்பர் கம்ப்யூட்டர் உள்ளது'' என்றும் கூறி யுள்ளார்.



# இன்பம் விளையும்!



உலவும் தென்றல் காற்றதுவும்
உள்ளவன் இல்லான் பார்ப்பதில்லை!
வானின் மேகம் மழைகூட
வறியவன் வல்லான் பார்ப்பதில்லை!
ஆதவன் வீசும் கிரணங்கள்
ஆண்டான் அடிமை பார்ப்பதில்லை!

எல்லா உயிரும் தம்முயிராய்
ஏற்றுக் காப்பவர் வள்ளல்தான்!
இனத்தை இனமே பிரிக்கின்ற
ஏற்றத் தாழ்வும் ஏனாமோ?
இனவெறி மதவெறி ஒழிந்தாலே
இன்பம் விளையும் எந்நாளும்!

- ஆ.க.இராஜாமணி

# 'அ'னா 'ஆ'வன்னா!



'அ'னா 'ஆ'வன்னா
அறிவை வளர்க்க வேண்டும் - நீ
ஆடிப் பாட வேண்டும்

## கவிதைப் பூங்கா

'இ'னா 'ஈ' யன்னா
இறையைத் தினமும் தொழுது - நீ
ஈகைக் குணம் பழகு!

'உ'னா 'ஊ'வன்னா,
உயிரினும் பெரிதும் மானம் - நீ
உணர்ந்து செய் தானம்!

'எ'னா 'ஏ' யன்னா,
எண்ணித் துணிவது வீரம் - நீ
ஏங்கிக் கிடப்பது பாரம்!

'ஐ'யன்னா,
ஐந்து புலன்கள் இருக்கு - நல்ல
அறிவைத் தரவே நமக்கு!

'ஒ'னா 'ஓ'வன்னா
ஒன்றுபட்டால் வாழ்வு - நீ
ஓடிப் பிரிந்தால் தாழ்வு!

'ஔ'வன்னா 'ஃ'ன்னா
ஔவை சொன்னதே போதும் -
தம்பி
அஃதே நமக்கு வேதம்!

- புதுவை சந்திரஹரி

## பூனையாரே..!

"பூனையாரே பூனையாரே
நில்லுங்க - நீங்க
போகுமிடம் எங்கே என்று
சொல்லுங்க?

பானை சட்டி உருட்டிடவா
போறீங்க - பசும்
பாலை தேடிக் குடித்திடவா
போறீங்க?

எலியைப் பிடிக்க ஆசைகொண்டா
போறீங்க? - நீங்க
ஏறி பரணில் என்ன தேடப்
போறீங்க?"

"கலியைப் போல கயவர் கூட்டம்
வாராங்க - நாட்டைக்
காக்க வேண்டும்; காஷ்மீர் நோக்கி
போறேங்க!"



- கவிமாமணி மலரடியான்



# பதற்றம்

நம் நாடு முழுவதும் தற்போது வியாபித்துள்ள வியாதி, 'பன்றிக் காய்ச்சல் பயம்'. பன்றிக் காய்ச்சல் என்பது, பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் பயமுறுத்தும் அளவுக்கு அதிபயங்கர தொற்றுநோயில்லை. சாதாரண ஃபுளு காய்ச்சலைப் போலவே காணப்படுகின்ற இந்தப் பன்றிக் காய்ச்சல் பெரும்பாலோருக்குத் தானாகவே சரியாகி விடும். உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாதவர்களுக்கும், ஏற்கெனவே வேறு ஏதேனும் சிக்கலான நோய் இருப்பவர்களுக்கும் தான் பிரச்சினை. ஆகவே, காரணமில்லாமல் எல்லோரும் பயப்படத் தேவையில்லை.




**வைரஸ் நோய்:**

இன்ஃபுளுயன்சா - A (H1N1) என்னும் வைரஸ் கிருமிகளால் பன்றிக் காய்ச்சல் வருகிறது. இதை ஆங்கிலத்தில் 'ஸ்வைன் ஃபுளு' (Swine Flu) என்கிறார்கள். 'ஸ்வைன்' என்றால் 'பன்றி' என்று பொருள். இது முதன் முதலில் பன்றிகளைத் தாக்கிய காரணத்தால், இந்தப் பெயரைப் பெற்றது. நாளடைவில், இந்த வைரஸ் கிருமிகள் வீரியம் பெற்று, பன்றியிடமிருந்து மனிதனைத் தாக்கத் தொடங்கியது. இப்போது நோயுள்ள மனிதனிடமிருந்து மற்றொரு மனிதனைத் தாக்குகிறது. முதன் முதலில் மெக்ஸிகோ நாட்டில்தான் இந்த நோய் வந்தது. அங்கிருந்து அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்குப் பரவி, இப்போது இந்தியாவுக்கு வந்துள்ளது.

**அறிகுறிகள் :**

அதிகக் காய்ச்சல், உடல் வலி தலை வலி தொடர்ந்த தும்மல், இருமல், தொண்டைவலி, மூக்கு ஒழுகுதல், மார்புச் சளி, மூச்சடைப்பு, மூச்சு விடுவதில் சிரமம், வாந்தி, வயிற்றுப்போக்கு, பசியின்மை, சோர்வு போன்றைவை இந்நோயின் முக்கிய

## வித்தியாசம்

**சாதாரண ஃபுளு காய்ச்சலுக்கும் பன்றிக் காய்ச்சலுக்கும் என்ன வித்தியாசம்?**

- சாதாரண ஃபுளு காய்ச்சலில் காய்ச்சல், மூக்கு ஒழுகுதல், தொண்டை வலி, இருமல், தும்மல் போன்றவை இருக்கும். பன்றிக் காய்ச்சலில் கூடுதலாக வாந்தி, வயிற்றுப்போக்கு இருக்கும்.
- சாதாரண ஃபுளு காய்ச்சலில் முதலில் மூக்கில் நீர் வடிதல், தும்மல், இருமல் இருக்கும். பிறகுதான் காய்ச்சல் வரும். பன்றிக் காய்ச்சலில் முதலிலேயே அதிகக் காய்ச்சல் வரும். மூன்றாம் நாளில் மூக்கில் நீர் ஒழுகும். தும்மல், இருமல் தொடரும்.

# வேண்டாம்!

அறிகுறிகள். இவை இருந்தால், உடனடியாக டாக்டரிடம் செல்லுங்கள். இவைப் பன்றிக் காய்ச்சலின் அறிகுறிகள்தான் என்று டாக்டர் சந்தேகித்தால், அவர் உங்களை மேல் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்புவார்.

**எப்படிப் பரவும்?**

இந்நோயுள்ள ஒருவர் இருமும்போது இவ்வைரஸ்கள் காற்று மூலம் அடுத்தவர்களுக்குப் பரவுகிறது. ஒருமுறை இருமினால் ஆயிரக்கணக்கான வைரஸ்கள் ஒரே நேரத்தில் வெளியேறி அருகில் உள்ளவர்களைத் தாக்கப் புறப்படும். நோயாளியின் மூக்கு, வாய் போன்ற பகுதிகளில் வைரஸ்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். அந்த இடங்களைத் தொட்டுவிட்டு, அதே கைவிரல்களால் அடுத்தவர்களைத் தொட்டால் கிருமிகள் அவர்களுக்கும் பரவிவிடும்.

**என்ன சிகிச்சை?**

சாதாரணக் காய்ச்சலாக இருந்தால், வழக்கமாக ஃபுளு காய்ச்சலுக்குத் தரப்படும் மருந்துகளில் சரியாகிவிடும். இல்லையென்றால், தொண்டைச் சளியைப் பரிசோதித்து, அதில் ஹெச்1என்1 கிருமிகள் உள்ளதா என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதில் பன்றிக் காய்ச்சல்தான் என்பது உறுதியானால், ஐந்து நாள்களுக்கு 'டாமிஃபுளு' மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். காய்ச்சலுக்கும் மற்ற நோய்க்குறிகளுக்கும் மருந்துகள் தேவைப்படும்.

**யாருக்குப் பாதிப்பு அதிகம்?**

ஏற்கனவே ஆஸ்துமா பாதிப்பு உள்ளவர்கள், நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்கள், சர்க்கரை நோயாளிகள், சிறுநீரக நோய் உள்ளவர்கள், இதய பாதிப்பு உள்ளவர்கள், குழந்தைகள், வயதானவர்கள் போன்றோர் இந்நோயினால் அதிக பாதிப்படைகிறார்கள். இவர்கள் சற்றுக் கூடுதல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**தடுப்பது எப்படி?**


இந்நோய் அடுத்தவர்களுக்குப் பரவுவதைத் தடுக்க, இந்நோயுள்ளவர்கள் இருமும் போதும் தும்மும் போதும் மூக்கையும் வாயையும் சுத்தமான கைக்குட்டையால் மூடிக்கொள்ள வேண்டும். கைக்குட்டை இல்லையென்றால், கைகளால் முகத்தை மூடி, முடிந்த வரை சளி வெளியில் தெறிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிறகு, கைகளை அடிக்கடி சோப்புப்போட்டுத் தண்ணீரில் கழுவ வேண்டும். வீட்டில் ஓய்வெடுப்பது

**டாக்டர் கு. கணேசன்**



## முகமூடிகள் அவசியமா?

எல்லோருமே முகமூடி அணிய வேண்டும் என்கிற அவசியமில்லை. சளி, காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களோடு நெருக்கமாகத் தொடர்பு வைத்துக்கொள்கிறவர்கள் மட்டும் முக மூடி அணிந்தால் போதும். அடுத்து, முகமூடிதான் அணிய வேண்டும் என்றில்லை. முகத்தை மூடிக்கொள் வதற்குச் சுத்தமான கைக்குட்டை போதும். முகமூடி அணிவதாக இருந்தால் மூன் றடுக்கு முகமூடி அல்லது N95 இரக முகமூடியை மட்டுமே அணிய வேண்டும். இவைதான் வைரஸ் கிருமிகளிலிருந்து நம்மைக் காக்கும். இன்னொன்று, உப யோகித்த முகமூடியைத் தொடநேர்ந் தாலோ, கழற்றினாலோ, கைகளை நன்றாகக் கழுவிக்கொள்ள வேண்டும். ஒருமுறை உபயோகித்துக் கழற்றிய முகமூடியை மீண்டும் அணியக் கூடாது. ஏற்கனவே அணிந்த முக மூடியை வெளியில் எறியாதீர்கள். அதன் மூலம் பலருக்கும் நோய் பரவிவிடும். ஆகவே, அதைக் குப்பைத்தொட்டியில் போடுங்கள்.




நல்லது. சிறார்கள் பள்ளிக்கூடத்திற்கு ஒரு வாரம் போக வேண்டாம்.

மற்றவர்கள் இப்படிச் செய்தால் நோய் வராது.

### H1N1 என்றால் என்ன?

H1 என்றால் ஹீம்அக்ளுட்டினின் புரதம். (Haemagglutinin Protein)

N1 என்றால் நியூரோமினிடேஸ் புரதம். (Neurominidase Protein)

- பொதுஇடங்களுக்குச் சென்று திரும் பினால், வெதுவெதுப்பான தண்ணீரில் உப்பு கலந்து கொப்பளித்து, தொண்டையைச் சுத்தம் செய்யுங்கள்.
- மூக்கையும் கண்களையும் கைகளை யும் சோப்புப்போட்டுக் கழுவி சுத்தம் பேணுங்கள்.
- நோய் எதிர்ப்புச் சக்தி பலமாக இருந் தால் இது அவ்வளவாகப் பாதிக்காது. ஆகவே, சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டு உங்கள் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிக மாக்கிக் கொள்ளுங்கள்.
- உடற்பயிற்சிகளைச் செய்து சுறுசுறுப் பாக இருங்கள்.
- காற்றோட்டமான இடத்தில் நன்றாகத் தூங்குங்கள்.
- நிறையத் தண்ணீர் குடியுங்கள்.
- கடை, சந்தை, தியேட்டர், பேருந்து நிலையம், ரயில் நிலையம் போன்ற மக்கள் கூடும் இடங்களில் இருப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**தடுப்பூசி உண்டா?**

இந்த நோய்க்கு இதுவரை தடுப்பூசி இல்லை. ஆராய்ச்சியில் உள்ளது. இன்னும் சில மாதங்களில் தடுப்பூசி வந்துவிடும்.



# கோகுலம் டைஜஸ்ட்


இந்த டைஜஸ்டில்...

- ராக்கெட்டின் முன்னோடி - எஸ்.சந்தோஷ்குமார், கோவை
- மர ஆப்பிள் - த.மணிமோகன், வெள்ளக்கோவில்
- சிங்கப்பூர் 4 பவுண்ட் - தஸ்மிலா, கீழக்கரை
- தாஜ்மஹாலின் தம்பி - எஸ்.திவ்யா, ஆத்தூர்
- பயமா? - கே.ஜே.ஷஃபானா அப்ஸின், திருவாரூர்
- பைரோகிளாஸ்டிக் ஓட்டம் - இரா.ரமேஷ், காளப்பட்டி

உள்ளே...

புகை வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார் விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன். அப்போது ஒரு நிறுத்தத்தில் ரயில் நின்றது. ஐன்ஸ்டீன் சாப்பிடுவதற்காக இறங்கி அங்கிருந்த சிற்றுண்டிச் சாலையை நோக்கிச் சென்றார். சாப்பிட உட்கார்ந்த ஐன்ஸ்டீனிடம் சிற்றுண்டிகளின் பட்டியலை எடுத்து நீட்டினார் பணியாளர். ஐன்ஸ்டீன் தனது மூக்குக் கண்ணாடியை ரயில் பெட்டியிலேயே மறந்து போய் வைத்து விட்டு வந்திருந்தார். ஆகவே தமது அருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவரிடம், அந்தப் பட்டியலை நீட்டி படித்துச் சொல்ல வேண்டினார்.

அதை வாங்கிப் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்த மனிதர், "உங்களைப் போலவே எனக்கும் எழுதப்படிக்கத் தெரியாது" என்றார் அப்பாவித்தனமாக.

- ம.விவேக், குட்டம்

# உங்களைப் போலவே..!



பண்டித ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தபோது, நாடாளுமன்றத்தில் பேசுகையில் நிறையப் புத்தகங்களிலிருந்து மேற்கோள் காட்டி பேசுவார். அப்படி ஒரு முறை அவர் பேசிக்கொண்டிருந்தபொழுது, எதிர்க்கட்சி தலைவர் ஒருவர் நடுவில் எழுந்து, "நேரம் இல்லை, நேரம் இல்லை என்கிறீர்களே, புத்தகங்களைப் படிக்க மட்டும் நேரம் எப்படி வந்தது' என்று கிண்டலடித்தார்.

'திருடுகிறேன்' என்றார் நேரு. நாடாளுமன்றத்தில் கூடியிருந்த பலரும் திகைத்து விட்டனர். அப்படியானால், இவர்


மகாத்மா காந்தியிடம், வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவர் உரையாடிக் கொண்டிருந்தார். தமது கேள்விகளுக்கு மகாத்மாவிடமிருந்து பதில்கள் பெற்றுக் கொண்டு வந்த நிருபர் அவரிடம், "நடைமுறைக்கு ஏற்ற நிலையில் தாங்கள் நட்பைப் பற்றி ஒரு தெளிவான விளக்கம் அளித்தால், அதை மக்களிடம் அறிவிக்க முடியும். அதனால் மிகுதியான மக்கள் நண்பர்களைப் பெறுகின்ற வழியை அறிந்து கொள்வார்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு காந்திஜி, "நட்பைப்

சம்பவம்

யாரோ எழுதித் தருவதை பேசுகிறார் என்று நினைத்தனர் சிலர்.

ஆனால் நேருவோ, 'நான் எத்தனை மணிக்கு உறங்கப் போவது என்பதையும் எழுவது என்பதையும், என் உதவியாளர் தீர்மானிக்கிறார். ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு மணி நேரம், நான் உறங்குவதற்கு ஒதுக்கு கிறார். அதில், நாள்தோறும் இரண்டு மணி நேரத்தை படிப்பதற்காக நான் திருடு கிறேன்'' என்று விளக்கினார் நேரு!



# திருட்டு?!

- அ.க.அப்சானா பர்வீன், உ. எண் 487

பற்றி எனக்கு எதுவும் தெரியாதே'' என்று பதில் அளித்தார்.

''அப்படியென்றால் உங்களுக்கு நண்பர்களே இல்லையா?'' என வியப் போடு கேட்டார் நிருபர். உடனே,

''எனக்குப் பகைவர்களாக யாரும் இல்லை. அவ்வாறு இருந்தால்தானே நட்பின் பெருமை தெரியவரும். நான் என் கண்களில் படுகின்றவர்களை யெல்லாம் என்னைப் போலவே நேசிக்கிறேன். அவர்களும் என்னை அப்படியே நேசிக்கிறார்கள்'' என்றார் காந்திஜி.

- ஏ.கே.நாசர், டி.ஆர்.பட்டினம்

# நேசம்!



# ராக்கெட்டின்

ஒரு படைக்கலனாக ராக்கெட் பயன் படுத்தப்பட்டது, பதினெட்டாம் நூற்றாண் டில்! அதுவும், இந்தியாவில், மைசூரில் தான்! 1780இல் ஆங்கில குடியேற்றப் படைகளுக்கு எதிராக, ஹைதர் அலி ராக்கெட் தாக்குதல் நடத்தி அவர்களை வியப்பில் ஆழ்த்தினார்.

ஹைதரின் ராக்கெட் படைப்பிரிவில் 1200 போர் வீரர்கள் இருந்தனர். ஹைதரின் மகன் திப்பு சுல்தானிடம் 5000 பேரைக் கொண்ட ராக்கெட் படைப்பிரிவு



இருந்தது.

ஹைதரின் ராக்கெட் 2.5 முதல் 5.5 கிலோ கிராம் வரை எடையுள்ளது. இதன் எரிபொருள் 20 செ.மீ. நீளமும் 4 செ.மீ. விட்டமும் உடைய ஒரு இரும்புக் குழாயில் அமைந்திருக்கும். மூன்று மீட்டர் நீளமுள்ள ஒரு மூங்கில் தடி இதனோடு இணைக்கப்பட்டிருக்கும். இந்த மூங்கில் கம்பு ராக்கெட் பறக்கும்போது அதற்கு வழிகாட்டியாக இருக்கும்; ராக்கெட்டின் பாதையை உறுதிப்படுத்தும்.

கைகளால் வீசப்பட்ட ராக்கெட்டுகள் ஒன்றரை கி.மீ. தூரத்திற்கு மேலே பயணம் செய்தன. ராக்கெட் கண்டுபிடிப்புக்கு இவர்களே முன்னோடிகள். ஆங்கிலேயர் களை இந்த ராக்கெட்டுகள் பெரிதும் கவர்ந்தன.

இந்த ராக்கெட்களை வலுப்படுத்தும் பணியில் ஆங்கிலப் படைத்தளபதி வில்லியம் கான் கிரீவ் ஈடுபட்டார். அதைத் தொடர்ந்து டென்மார்க்கின் தலைநகரான கோபன் ஹேகன்மீது பிரிட்டன் நடத்திய தாக்குதலில், இந்த ராக்கெட்டுகளை பயன்படுத்தி, தலைநகரை முற்றாக நிர்மூலப்படுத்தியது.

போலோன், டான்சிக், லீப்ஸிக் போன்ற

**என். சந்தோஷ் குமார்,**
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயா,
கோவை.





# முன்னோடி!

நகரங்களையும் ராக்கெட் தாக்குதல் மேற்கொண்டுதான் ஆங்கிலேயர் கைப் பற்றினார். கான்கிரீவ் நிர்மாணம் செய்த ராக்கெட்டுகள் 2,700 மீ. தூரம் வரை பறந்து சென்று தாக்கின. இதைக் தொடர்ந்துதான் மண்ணிலிருந்து விண்ணிற்கு செல்லும் ராக்கெட்டுகள் 'கொன்ஸ்டன்டின் லியோல் கோவ்ஸ்கி' என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டன.


இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லர் பயன்படுத்திய வி2 ரக ஏவுகணைகள், இஸ்ரேல் மீது சதாம் உசேன் பயன்படுத்திய ஸ்கட் ஏவு கணைகள்; அவற்றை வான்வெளி யில் தகர்த்த 'பேட்ரியட்' ஏவுகணைகள், இந்தியா தயாரித்துள்ள அக்னி, ஆகாஷ், பிருத்வி, தனுஷ் ஏவுகணைகள் தவிர, விண்வெளி ஆராய்ச்சிக்கான ராக்கெட்டு கள் ஆகிய அனைத்துக்குமே ஆதிகாரண மாக அமைந்தது ஹைதரும், திப்புவும் தயா ரித்துப் பயன்படுத்திய ராக்கெட்டுகள்தான்.

இதை அவர்களேகூட எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ●











**மீரா சிவராமகிருஷ்ணன்,**
நான்காம் வகுப்பு, உ. எண் 697,
பக்தவச்சலம் வித்யாலயா,
சென்னை - 49



**கு.சிவசங்கர்,**
எட்டாம் வகுப்பு, அரசு
மேல்நிலைப் பள்ளி,
விளாத்திக்குளம்



**த.மௌரியா,**
ஒன்பதாம் வகுப்பு, உ. எண் 939,
கீர்த்திமான் மெட்ரிக் மே.நி பள்ளி,
கோவை



**என்.எம்.தீபிகா,**
ஒன்பதாம் வகுப்பு,
முருக தனுஷ்கோடி
மகளிர் மேல்நிலைப்
பள்ளி, சென்னை - - 81


## திறமை



**எஸ்.டாலியா டிக்ஸி,**
ஆறாம் வகுப்பு, உ. எண் 24,
விக்டரி மெட்ரிக் மே.நி. பள்ளி,
மைலோடு



**மீ.பிரபு வைரவேல்,**
ஏழாம் வகுப்பு,
விருதுநகர்



**ஏ.சுவாதி,**
எட்டாம் வகுப்பு, முருகதனுஷ்
கோடி மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தண்டையார்பேட்டை, சென்னை

**சிவபாக்கியம்,**
எட்டாம் வகுப்பு, முத்துசாமி
மெட்ரிக் பள்ளி,
மாதேசம்பாளையம்



# உங்கள் கைவண்ணம்!



வாசனை திரவியமாகப் பயன்படும் ஜாதிக்காயில் மொத்தம் 80 வகைகள் உள்ளன. ஆண்டுதோறும் பூத்து காய்க்கக்கூடிய ஜாதிக்காய் மரம் 25 அடி உயரம் வரை வளரும். பூக்கள் மஞ்சள் நிறத்தில் சிறியதாக இருக்கும்.

பேரிக்காய் அளவுள்ள இதன் பழம் நன்றாக முற்றியதும் மஞ்சள் நிறமாகிவிடும். தோலை உரித்தால் உள்ளே செந்நிறத்தில் சதைப் பகுதி இருக்கும். இதைத்தான் ஜாதிப் பத்திரி என்பர். இதைக் காயவைத்து பொடி செய்து உணவுப் பொருட்களுக்கு வாசனையூட்ட பயன்படுகிறது. அதற்கு உள்ளே மாநிறத்தில் இருக்கும் கொட்டையையும் அதற்குள் இருக்கும் விதையையும்தான் ஜாதிக்காய் என்கிறோம்.

அஜீரணக் கோளாறு, வயிற்றுவலி போன்ற

# பூ பூக்கும்

நோய்களுக்கு இது மருத்துவப் பொருளாக பயன்படுகிறது. இரத்தத்தை தூய்மைப் படுத்துவதிலும் ஜாதிக்காய் முக்கிய பங்கு வகிக்கிறது. ஜாதிக்காய் மரம் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மலைச் சரிவுகளில் அதிகமாக வளர்கிறது.

**- எஸ்.சுப்ரியா, உ. எண் 79, சென்னை**


அடுக்குமல்லி, அதிகாலை ஐந்து மணிக்குப் பூக்கும். செம்முல்லை, காலை ஆறு மணிக்குப் பூக்கும். பவள மல்லிகை, இரவு எட்டு மணிக்குப் பூக்கும். பிச்சிப்பூ, மாலை ஆறு மணிக்குப் பூக்கும். அந்தி மந்தாரை, மாலை நான்கு மணிக்குப் பூக்கும். நிஷாகாந்தி பூ, இரவு பன்னிரண்டு மணிக்குப் பூக்கும்.

**- ஜீ.வி.நிர்மலா தேவி, உ. எண் 999, திருவண்ணாமலை**

# நேரம்!

ஓர் அரிசி மணியில் 1341 எழுத்துக்களைச் செதுக்கி உலக சாதனை புரிந்துள்ளார் ஜெய்ப்பூரைச் சார்ந்த சுரேந்திர குமார் ஆச்சார்யா என்பவர். அரிசியின் இரண்டு பக்கங்களிலும் 168 நாடுகளின் பெயரும் அவற்றின் தலைநகரங்களும் பொறிக்கப்பட்டதைக் குளோசப் முறையில் பெரிதாக்கி எடுத்திருக்கிறார்கள்.

**- எம்.சிவரஞ்சனி, திருவாரூர்**



✱ பறக்கும் அணில்கள் தெற்கு ஆசியா, வடஅமெரிக்கா ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. இதன் கால்களிடையே வளர்ந்திருக்கும் சவ்வை விரித்து பாராசூட்டைப் போலப் பயன்படுத்தி மரத்திலிருந்து மரத்துக்குத் தாவுகிறது இந்த அணில்!

**- பு.இந்துமதி, காஞ்சிபுரம்**



அமெரிக்காவில் காணப்படும் தேவாங்கு போன்ற ஒரு விலங்கு ஸ்லாத். இது மிகவும் சோம்பேறி. மரங்களில் தலைகீழாக தொங்கிய படியே தன் வாழ்க்கையில் பாதியை செலவிடும். மரங்களில் மெதுவாக தவழ்ந்தபடி செல்லும். இவற்றால் தரையில் நடக்க இயலாது. இதனை பின்பற்றி ஒரு வார ஆராய்ச்சியில், இவ்விலங்கு 11 மணி நேரம் உணவு உண்டது, 18 மணி நேரம் ஓய்வு எடுத்தது, 129 மணி நேரம் தூங்கியது. உலகிலேயே அதிக நேரம் தூங்கும் விலங்கு இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் முன் கால்கள் வலுவானவை. இதன் நகங்கள் கூர்மையானவை. இதன் மூலம் தன்னை எதிர்ப்பவரை தாக்கும். சண்டை போடும் போது சுறுசுறுப்புடன் செயலில் இறங்கும்.

**- எம்.மீரா, கோவை**

## கற்பனைக்கு வேலை



ஞானசேகரன்,
உ.எண்:1145,
திருக்கழுக்குன்றம்.


இங்குள்ள படத்துக்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்



# வண்ணம் தீட்டுங்கள்!

# கண்ணாமூச்சி

கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்.




மர
ஆப்பிள்!

# குட்டிக் கதை

பழ மரங்கள் சூழ்ந்த காட்டுப் பிரதேசத்தில் வசித்தது ஒரு குரங்கு. பசித்தால் ஏதாவது மரத்தில் ஏறி பழங்களைச் சாப்பிடும். களைப்படைந்தால் நிழலில் தூங்கும்.

ஒருநாள் அது பக்கத்து கிராமத்துக்கு வந்தது. ஒரு வீட்டின் ஜன்னல் வழியாகப் பார்த்தது. உள்ளே ஒரு கிண்ணத்தில் அழகான பழங்கள் நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. உள்ளே நுழைந்த குரங்கு இரண்டு கைகளிலும் இரண்டு பழங்களை எடுத்துக்கொண்டது. பின் அது காட்டுக்குள் ஓடியது.

சிவப்பு நிறத்தில் பளபளவென்று இருந்தன அந்தப் பழங்கள்! தான் இதுவரை சாப்பிடாத பழம் என்பதால், குரங்குக்கு உற்சாகம் வேறு கரை புரண்டது. சிவந்த நிறமுடைய அந்த ஆப்பிள் பழங்களை, முகர்ந்து பார்த்தது. எதுவும் வாசம் தெரியவில்லை. கடிக்க முயற்சித்தபோது, பற்கள் வலித்தன. கீழே போட்டது; அப்போதும் அவை எதுவுமே ஆகவில்லை. அப்போதுதான் குரங்குக்குப் புரிந்தது.. இவை பழங்கள் இல்லை என்பது. அழகுக்காக வைத்து இருந்த பொம்மைகள் என்பது குரங்குக்கு எப்படித் தெரியும்?

எப்படி இருந்தாலும், அந்தக் காட்டில் வேறு குரங்களுக்குக் கிடைக்காத விசேஷப் பொருள் தம்மிடம் இருக்கிறது என பெருமைப்பட்டது, அது. எப்பொழுதும் அவற்றைப் பெருமையோடு தூக்கிக் கொண்டே திரிந்தது. அவை சூரிய வெளிச்சத்தில் மின்னுவதைப் பார்த்து ரசித்தது. இந்த விளையாட்டில் பசிகூட அதற்குப் பெரிதாகத் தெரியவில்லை.

ஒரு நாவல் மரத்தை நெருங்கியதும் தான் அது சுய நினைவுக்கு வந்தது. பசி வயிற்றைக் கிள்ளியதை உணர்ந்த நிலையில், மரத்தில் ஏறி பழங்களைப் பறிக்க நினைத்தது.

ஆனால், இரண்டு கைகளிலும் இருந்த ஆப்பிள்களை கீழே வைத்து விட்டு மரம் ஏறவும் மனசில்லை. காரணம், வேறு யாராவது எடுத்துக்கொண்டு விட்டால் என்ன செய்வது என்கிற பயம்! கைகளில் வைத்துக்கொண்டு ஏறவும் முடியாது. வேறு வழியின்றி பசியைத் தள்ளிப் போட்டது.

அப்போதுதான் இன்னொரு விஷயமும் ஞாபகத்துக்கு வந்தது. ஆப்பிள்களைக் கையில் தூக்கியதிலிருந்து, அது தூங்கவும் இல்லை.

இப்படியே மேலும் இரண்டு நாட்கள் கடந்தன. பசியும் ஓய்வும் இல்லாததால் தளர்ந்த குரங்குக்கு மயக்கம் வந்தது. அதன் கையிலிருந்த ஆப்பிள்கள் நழுவி கீழே விழுந்தன.

எந்தப் பொருளை அதிசயம் என்றும் அபூர்வம் என்றும் ஆசைப்பட்டதோ, அந்த மர ஆப்பிள்கள் இரண்டும் உருண்டு உருண்டு அங்கிருந்த ஓடை நீரில் விழுந்தன; நீர்ப் போக்கில் மிதந்து போயின. எவ்வளவு தான் அழகாயிருந்தாலும், பயன்படுத்த முடியாததை சுமப்பதாலும் பயனில்லை என்பது குரங்குக்கு எப்படித் தெரியும்!

**த. மணிமோகன்.**
உ.எண்:892.
பன்னிரண்டாம் வகுப்பு,
அறிஞர் அண்ணா
மேனிலைப்பள்ளி,
வெள்ளகோவில்.



**I.** 1) ஒருவனிடம் இருந்த பணத்தில் ஐந்தில் மூன்று பாகத்தைச் செலவழித்த பிறகு 8 ரூபாய் மிஞ்சியது. அப்படியானால், அவனிடமிருந்த பணம் எவ்வளவு?

2) இரண்டு எண்களின் கூட்டுத் தொகை 2,346. ஓர் எண் மற்றதைப் போல இரு மடங்கு. அந்த எண்கள் எவை?

3) ராமனுக்கு இப்போது என்ன வயதோ, அதைப் போல 4 மடங்கு இன்னும் 30 வருடத்தில் ஆகும். இப்போது ராமனுடைய வயது என்ன?

- ஆர்.அம்பிகா, மதுரை



**II.** கீழே கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு பதில்களின் கடைசி எழுத்து 'ர்'. 3 முதல் 10 எழுத்துக்கள் வரை ஏறு வரிசையில் விடைகள் உள்ளன.

1. இந்தியாவில் தங்கம் கிடைக்குமிடம்
2. ஆசையே துன்பத்தின் காரணம் என்று போதித்த ஞானி
3. உலகின் மிகப் பெரிய மிருகக் காட்சி சாலை அமைந்துள்ள இடம்
4. சேக்கிழார் கட்டிய கோயில் உள்ள இடம்
5. இராமகிருஷ்ண மடத்தைத் தோற்றுவித்தவர்
6. திருப்புகழைப் பாடியவர்
7. இந்திய நெப்போலியன் என்று அழைக்கப்பட்டவர்
8. சீவக சிந்தாமணியின் ஆசிரியர்

- எஸ்.தீபிகா குமார், ஆறாம் வகுப்பு, கமலா சுப்ரமணியன் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்



... ன்றுக்கொன்று சம்பந்தமில்லாத இரு வார்த்தைகள் குழம்பி கலந்திருக்கின்றன. அவற்றை கண்டு பிடியுங்கள்.

1.பயிஸ்ரல், 2.பம்பீழம்மான்ஸ், 3.பிள்காவெபப்ளி, 4.காதய்ளிபாக், 5.விக்குங்இரு, 6.மாம்காணவிர், 7.கபேதம்னாங், 8.பிஜைழத்தமளை

- என்.லோகேஷ்வர், உ. எண் 586, எட்டாம் வகுப்பு, பெத்தி செமனேர் மேல்நிலைப் பள்ளி, புதுச்சேரி

## புதிர்கள்

**IV.** கீழ்கண்ட ஆறு கேள்விகளுக்கும் பதில்களின் முடிவு எழுத்து 'ரி' எங்கே விடைகளைக் காணுங்கள். பார்க்கலாம்.

1. இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே எல்லைக் கோடாக அமைந் திருக்கும் கிராமம் எது?

2. சோகத்தைக் குறிக்கும் ராகம் எது?

3. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரி எது?

4. இரு முறை நோபல் பரிசு பெற்ற பெண் விஞ்ஞானி யார்?

5. பாரதியார் பாடிய குயில் தோப்பு உள்ள இடம்

6. தென்னிந்தியாவில் கல்வியறிவில் முதலிடம் பெற்ற மாவட்டம் எது?

**- கி.பாலாஜி, உ. எண் 657, மயிலாடுதுறை**

**V.** கீழே கேட்கப்பட்டிருக்கும் ஆறு கேள்விகளுக்கும் பதில்களின் கடைசி எழுத்து 'ல்' ஏறு வரிசையில் 3, 4, 5, 6, 7 மற்றும் 8 என்ற எழுத்துக்களில் அமைந்திருக்கும்.

1. உலகிலேயே உயரமான கோபுரம் எது?

2. காபியை அதிகமாக விளைவிக்கும் நாடு?

3. மலேரியா நோய் தாக்கினால் உடலின் எந்த உறுப்பு பாதிக்கப்படும்?

4. இங்கிலாந்தின் தபால் துறையின் பெயர் என்ன?

5. இந்தியாவின் மிகப் பெரிய பல் நோக்கு அணைக்கட்டு எது?

6. எவரெஸ்டில் ஏறிய முதல் இந்தியப் பெண் யார்?

**- த.தாரணி, உ. எண் 785, அம்மாபேட்டை**

# பயில்ரல்?

**VI.** கீழே கேட்கப்பட்டிருக்கும் ஆறு கேள்விகளுக்கும் பதில்களின் கடைசி எழுத்து 'ல்' ஏறு வரிசையில் 3, 4, 5, 6, 7 மற்றும் 8 என்ற எழுத்துக்களில் அமைந் திருக்கும்.



1. மைதானம் என்பதை குறிக்கும் வேறு சொல் இது?

2. உலகிலேயே மிகவும் வேகமாக வளரும் தாவரம் எது?

3. காச நோய் எந்த உறுப்பைப் பாதிக்கும்?

4. பூட்டுக்குப் பெயர் போன இடம் எது?

5. தமிழ்நாட்டில் பறவைகள் சரணாலயம் எங்குள்ளது?

6. பாரம்பரிய இயலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

**- எஸ்.தீபிகா குமார், தஞ்சாவூர்**

**விடைகள் 56ம் பக்கம்**

● 4000 வருடங்களுக்கு முன்பிருந்தே வீடுகளில் பூனை வளர்க்கப்பட்டு வருகிறது.

● இன்றைய வீட்டுப் பூனைகள், ஆப்பிரிக்க, ஐரோப்பிய காட்டுப் பூனைகளின் வழியில் வந்தவையாகும்.

● ஒரு பூனை தன் வாழ்நாளில் சராசரியாக 10,950 மணி நேரம் தூங்குகிறது.

● பெரும்பாலான பூனைகளுக்கு கண் இரப்பைகள் கிடையாது.

● பூனைகளால் நூற்றுக்கும் மேற்பட்ட வகைகளில் குரல் எழுப்ப முடியும். நாய்கள் பத்து வகை குரல் மட்டுமே எழுப்பும்.

● பூனைகளுக்கு இனிப்புச் சுவையை ருசிக்கும் சக்தி கிடையாது.

● பூனை ஒரு நாளைக்கு 14 மணி நேரம் உறங்கும்.

● பூனைக்கு அபாரமான கேட்கும் திறன் உண்டு.



அதன் வெளிக்காதில் மட்டும் 30 தசைகள் உள்ளன. (மனிதர்களின் வெளிக்காதில் 6 தசைகள் மட்டுமே உள்ளன.)


● ஒவ்வொரு மனிதனின் கைரேகையும் வித்தியாசமாக இருப்பதுபோல், ஒவ்வொரு பூனையின் மூக்கு நுனியும் வித்தியாசமாக இருக்கும்.

● அமெரிக்கர்கள் நாய், பூனைகளின் தீவனத்துக்காக ஒரு வருடத்தில் 3 பில்லியன் டாலர் செலவழிக்கின்றனர்.

● உலகிலேயே சிறிய பூனையின் பெயர்



**சிங்கப்பூர்**



சிங்கப்பூர். இதன் எடை வெறும் நான்கு பவுண்ட் மட்டுமே.


● வீட்டுப் பூனை இனம் மட்டுமே நடக்கும்போது, தன் வாலை செங்குத்தாக வைத்துக்கொண்டு நடக்கும். காட்டுப் பூனைகள் வாலை கால்களுக்கிடையில் வைத்துக்கொண்டோ அல்லது படுக்கை வசத்தில் வைத்துக் கொண்டோதான் நடக்கும்.

● பூனையின் ஆயுட்காலம் இருபது முதல் இருபத்து நான்கு ஆண்டுகள் என்றாலும், சராசரியாக பதினைந்து ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன.

– **தஸ்மிலா, கீழக்கரை**




# டி பவுண்ட்!







# தேச பக்தி!



எங்கள் பள்ளி மிகவும் பெரியது. சுமார் 2000 பேர் படிக்கின்றனர். காலை இறை வணக்கம் நடக்கும் மைதானம், பள்ளியின் உட்புறத்தில் அமைந்துள்ளது. ஒருநாள் காலை...

மாணவர்கள் ஒன்று கூடியவுடன் இறை வணக்கம் தொடங்கியது. முதலில் கொடி யேற்றம். பிறகு கடவுள் வாழ்த்து, குறள் விளக்கம், செய்திகள் வாசித்தல், தலைமை யாசிரியர் அறிவுரை என்று நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. அப்போது, வெளிப்புற கேட் வழியாக, ஒரு பசுங்கன்றுக்குட்டி, பள்ளிக் குள் நுழைந்து, சுவர் ஓரமாக நடந்து வந்ததை முதலில் கவனிக்கவில்லை. அந்த கன்றுக்குட்டி, இறைவணக்க மைதானத்தில் நுழைந்தது. அதைப் பார்த்த ஓர் ஆசிரியர் கன்றுக்குட்டியை, விரட்ட ஆரம்பித்தார். அது ஓடத் தொடங்கியது.

அப்போது, இறுதி நிகழ்ச்சியாக, 'நாட்டுப் பண்' பாடினர். கன்றுக் குட்டியை விரட்டிய ஆசிரியர், அப்படியே நின்று விட்டார். என்ன ஆச்சரியம்! நாட்டுப்பண் பாடி முடிக்கும் வரை, கன்றுக்குட்டியும் ஒரே இடத்தில் அசையாமல் நின்றது. இதை அங்கு குழுமி யிருந்த அத்தனை பேரும் பார்த்து அதிசயித் தனர். பின்பு, கன்றுக்குட்டி மீண் டும் ஓட ஆரம்பித்தது. அப்போது சிரித் தாலும், நினைக்க நினைக்க இப்போதும் வியப்பாகவே இருக்கிறது. கன்றுக்குட்டிக்கும் தேச பக்தியா?

- டி.தாமினி,
உ. எண் 186,
திருவண்ணாமலை

எங்கள் வகுப்புக்கு, ஹிந்தி பாடம் கற்பிக்க புதிதாக ஒரு ஆசிரியை வந்திருந் தார். தன்னை அறிமுகப்படுத் திக் கொண்ட அவர், மாணவர்களி

# வீட்டிலிருந்து...





# நரி துரத்தினால்..?

ஆங்கில ஆசிரியர் சுவாரஸ்யமாய் ஒரு கதை சொன்னார்.

"ஒரு பையன் சுற்றுலா போன இடத்துல தனியா காட்டில் மாட்டிக்கிட்டான். எப்படி வெளில வரதுன்னு அவனுக்குத் தெரியல. நடைபாதை தடத்தை வெச்சு நடந்து வந்திட்டிருந்தான். அந்த நேரத்துல, அவனை ஒரு நரி துரத்த ஆரம்பிச்சுது. தலை தெறிக்க ஓட ஆரம்பிச்சான் அந்தப் பையன். நரியும் வேகமாகத் துரத்த ஆரம்பிச்சது.

ஓடி வந்த பையனுக்கு அதிர்ச்சி! ஏன்னா, வழில பெரிய கிணறு. அதைத் தாண்டினாத்தான் தப்பிக்க முடியும். பின்னாலேயே நரி துரத்திட்டு வருது. இப்ப அந்தப் பையன் என்ன பண்ணுவான்?"

ஆசிரியர் சட்டென்று இந்தக் கேள்வியை எழுப்பினார். எல்லோரும் மௌனித்தார்கள்.

அப்போது குமார் சொன்னான் :

"ஓடி வந்த வேகத்துலயே லெஃப்ட்ல ஒதுங்கிடுவான். துரத்திட்டு வந்த நரி, வேகத்துல தடுமாறி கிணத்துல விழுந்துடும். அவன் தப்பிச்சுடுவான்!"

அதைக் கேட்ட ஆசிரியர் சொன்னார். "வெரிகுட். இப்படி பாஸிடிவ்வா யோசிக்கணும். ஆபத்து வரும்போது துணிவும், விவேகமும் இருந்தா, எந்த சூழ்நிலையிலும் வெற்றி பெறலாம்" அதைக் கேட்ட மாணவர்கள் அனைவரும் கரவொலி எழுப்பி, விடை சொன்ன குமாரைப் பாராட்டினார்கள்.

- மு.அருண்குமார், உ. எண் 670, ஓசூர்

டம் சொன்னார் :

"ம்... வரிசையா ஒவ்வொருத்தரா உங்களை அறிமுகம் செய்துக்கங்க. உங்க பேரு, உங்க அப்பா பேரு, என்ன பண்றாரு, எங்கேர்ந்து வரீங்க'ன்னு சொல்லுங்க பார்க்கலாம்."

ஒவ்வொருவராக சொல்லிக் கொண்டே வந்தனர். அப்போது, ஒரு மாணவன் சொன்னான்.

"என் பேரு ஜகதீஷ்; எங்கப்பா பேரு சதீஷ், எங்கப்பா வீட்டுல இருக்காரு; நான் வீட்டிலியிருந்து வரேன்!"

கடகடவென்று அவன் சொல்ல, டீச்சர் உட்பட அனைவருமே 'கொல்'லென்று சிரித்து விட்டோம்.

- ந.நிவேதா, ஆறாம் வகுப்பு, ஈரோடு



✱ உலகிலுள்ள தவளைகளில் மிகவும் பெரியது 'கோலியாத்' என்னும் ஒரு வகைத் தவளை. இந்தத் தவளை 82 செ.மீ. வரை நீளமும், 7 பவுண்டு வரை எடையும் இருக்கும். இதன் இரை எலிகளும், பாம்புகளும். இந்த வகைத் தவளைகள் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ளன.

✱ வட அமெரிக்காவில் காணப்படும் சில வகை எறும்புகள் தேன் சேகரிக்கின்றன. தேனீக்கள் சேகரிக்கும் தேனைவிட இத்தேன் மிகவும் சிறப்பானது ஆகும். சில வேளைகளில் இத்தேனைக் கொதிக்க வைத்து ஜாம் தயாரிக்கிறார்கள்.

✱ வெட்டுக்கிளி ஒரு குதியில் அதிக அளவு 3 மீட்டர் தாண்டும். இவற்றின் காதுகள் வயிற்றிலோ அல்லது முன் கால்களின் நுனியிலோ காணப்படும். வெட்டுக்கிளி மணிக்கு 6 மைல் வேகத்தில் பறக்கும்.

- **ஆர்.பிருந்தா, மதுரை**

✱ ஆக்டோபஸுக்கு ஆகாரம் எதுவும் கிடைக்காவிட்டால் பசி பொறுக்காமல் தன் கைகளையே கடித்து தின்றுவிடும். ஆனால் மறுபடியும் அந்த கைகள் முளைத்துவிடும்.

✱ சனி கிரகத்தை சுற்றி நீல வட்டம் இருக்கிறதல்லவா! இந்த வட்டப் பாதையின் நீளம் ஐந்து லட்சம் மைல்கள். அகலம் என்ன தெரியுமா! வெறும் ஒரு அடிதான்.

- **அ.யாழினி பார்வதம், சென்னை**

✱ மூன்றே நாடுகளில்தான் சந்தன மரம் உள்ளது. அவை, இந்தியா, இலங்கை,

# தன் கையே

பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளாகும்.'

✱ சவுதி அரேபியாவில் உள்ள காலார்ஃபி வடு என்ற எண்ணெய்





வயல்தான் உலகத்திலேயே பெரியது. இதன் நீளம் 150 மைல். அகலம் 22 மைல்.

**- சுப. நேசிகா, காயக்காடு**

✱ திருக்குறள் மதுரையில் அரங்கேற்றப்பட்டது. கம்பராமா யணம் திருவரங்கத்தில் அரங்கேற்றப் பட்டது. கந்தபுராணம் காஞ்சியில் அரங்கேற்றப்பட்டது. பெரிய புராணம் சிதம்பரத்தில் அரங்கேற்றப்பட்டது.

# தனக்குணிவு!

✱ உலகிலேயே மிகச் சிறிய ரயில்வே ரோடு, போப் ஆண்டவர் வசிக்கும் வாடிகன் நகரில் உள்ளது. 'போப்' என்னும் சொல் 'பாபா' என்னும் லத்தீன் மொழிச் சொல்லில் இருந்து உருவானதாகும்.

✱ போப் ஆண்டவருக்கென தனியாக ஒரு வானொலி நிலையம் உள்ளது. இது ரேடியோவைக் கண்டுபிடித்த மார்க்கோனி யால் அமைக்கப்பட்டது.

✱ போப்பின் உபயோகத்துக்குத் தங்கத்திலான தொலைபேசியும் உண்டு.

**- ஆர்.பி.இரமணி, மதுரை**

✱ வேற்றுமொழி மோகம் இனிய தமி ழோடு கலந்து எது கலப்பு சொல் என்றே தெரியாமல் போய்விட்டது. பிறமொழிக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் சில :

ஸ்டோர் - பண்டக சாலை
சபதம் - சூளுரை
சாதம் - சோறு
ஜாலி - மகிழ்ச்சி
ஜாம் - பழத்தொக்கு
சிலபஸ் - பாடத்திட்டம்
சுகந்தம் - நறுமணம்

**- த.மணிமோகன், பன்னிரண்டாம் வகுப்பு, அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி, வெள்ளக்கோயில்**




ஏ.கே.47-ஐக் காட்டினால் உடனே கைகளைத் தூக்கி விடுவீர்கள்தானே? அந்த ஏ.கே.47வின் விரிவு என்ன தெரியுமா? ஏ என்றால் ஆட்டோமேட்டிக். கே என்பது காலஷ்னிகோவ் என்ற கண்டுபிடிப்பாளர் பெயர். 47 என்பது கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு.

**- ஆர்.கவினி, உ. என் 522, திருவண்ணாமலை**

திறமை





ர.ஹேமலதா,
ஐந்தாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி,
வேலூர்



த.கவின்,
நான்காம் வகுப்பு,
ஸ்ரீவித்யா மந்திர், சேலம்


எஸ்.டேப்போடில் டிக்ஸி,
நான்காம் வகுப்பு, உ எண் 585,
மைலோடு

# சுட்டீஸ் கைவண்ணம்!



ஆர்.தமிழரசன்,
ஐந்தாம் வகுப்பு, சாரதா மெட்ரிகுலேஷன்
பள்ளி, செஞ்சி





ஏ.லலிதா,
நான்காம் வகுப்பு,
கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா, ஏற்காடு

## மரபுச்சின்னம்


இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நகரங்களில் ஒன்று மும்பை. பொருளாதார வளமிக்க மும்பையின் முக்கிய ரயில் நிலையம் சத்ரபதி சிவாஜி டெர்மினஸ். கடந்த ஆண்டு பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கான இந்த ரயில் நிலையம், தற்போது பலத்த பாதுகாப்புடன் இருக்கிறது. சுற்றுலா பயணிகள் வந்து பார்த்துப் போகும் இடமாக, அதன் நடைமேடை மாறிவிட்டது.

1878ம் ஆண்டு தொடங்கிய இதன் கட்டடப் பணிகள் 1888ல் முடிவடைந்தன. அன்றைய நாளில் அப்போதைய பிரிட்டன் பேரரசி 'விக்டோரியா' பெயரால், இதற்கு 'விக்டோரியா டெர்மினஸ்' என பெயரிடப்பட்டது. தற்போது இது சத்ரபதி சிவாஜி டெர்மினஸ் என பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

மும்பையில் சென்ட்ரல், பாந்த்ரா, சர்ச்கேட் என்றான இரயில் நிலையங்கள் நடுவில், சத்ரபதி சிவாஜி டெர்மினஸ் இருக்கிறது. இது மும்பையின் மிக முக்கிய ரயில் சந்திப்பாக விளங்குகிறது.

உலக அதிசயங்களின் ஒன்றான தாஜ்மஹாலுக்கு அடுத்தபடியாக, அதிக எண்ணிக்கையில் புகைப்படம் எடுக்கப்படும் கட்டடமும் இதுவே ஆகும். யுனெஸ்கோ இதனை பாரம்பரியச் சின்னமாக அறிவித்துள்ளது.

**எஸ். திவ்யா,**
பதினொன்றாம் வகுப்பு,
உ.எண்:66,
ஆத்தூர்.





# தாஜ்மகாலின் தம்பி!

**I.**1. விழிக்கும் வரை அமைதி மயம்; விழித்துவிட்டால் பிரளயம் - அது என்ன?

2. ஆடாமல் பாடுவான்; அசையாமல் பேசுவான் - அவன் யார்?

3. பறக்கும் ஆனால் பறந்து செல்லாது அது என்ன?

4. சின்ன தொப்பிக்காரன்; உரசினால் சிதறிப் போவான் - அவன் யார்?

- பி.சர்வேஸ்வரன், உ. எண் : 456, மதுரை

**II.**1. ஒரு பூ தான் பூக்கும்; நூறுக்கு




மேல் காய் காய்க்கும்; விருந்தென்றால் பந்திக்கு வரும் - அது என்ன?

2. ஒரே ஒரு கனி; அதைக் கூட்டினால் பதினொன்று; பெருக்கினால் முப்பது - அது என்ன?

- எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை

**III.**1. நீருக்குள்ளிருக்கும், மீனும் அல்ல. வெளியில் வந்தால் எரியும், நெருப்பும் அல்ல - அது என்ன?



2. தன்னை அழைத்தவனைத் தானே அழித்திடுவான் - அவன் யார்?

3. உடல் சிவப்பு; வாய் அகலம்; உணவு காகிதம் - அது என்ன?

- வ.கீர்த்தனாதேவி, உ. எண் 1000, திருவண்ணாமலை

# மேயும்

**IV.**1. பலநாள் காய்ந்து, ஒரு நாள் பழுக்கும் - அது என்ன?

2. உயிர் இல்லாத நீதிபதி, ஒழுங்காக நியாயம் சொல்கிறார் - அது என்ன?

3. அகன்ற வாய் உடையவள், திறந்த வாய் மூடாதவன் - அவன் யார்?

4. அங்கே சிலுக்குவாள், இங்கே



## விடுகதைகள்



பிலுக்குவாள், கதவு மூலையில் ஒண்டிக் கொள்வாள் - அவள் யார்?

**- ஜி.வி. நிர்மலா தேவி, உ. எண் 999, திருவண்ணாமலை**

**V.**1. ஒரு வாய் தண்ணீரை சுமந்தபடி உயரத்தில் நிற்கிறான். அவன் யார்?

2. ஆயிரம் கண்கள் உண்டு, அசந்து தூங்க இடம் உண்டு - அது என்ன?

3. மொட்டைத் தலையனுக்கு இரட்டைக் குல்லாய் - அவன் யார்?

4.வெளிச்சத்தை சுமந்தபடி வீதியுலா வருவான் - அவன் யார்?

5. வலை பின்னத் தெரிந்தவன், மீன் பிடிக்கத் தெரியாதவன் - அவன் யார்?

# மூக்கணாங்கயிறு!

6. எட்டுவது போல் தெரியும், ஆனால் எட்டாது. அது என்ன?

**- உ.ரியாஷ், கீழக்கரை**

**VI.**1. இத்தனூண்டு சிட்டுக் குருவிக்கு ஏழு முழம் சித்தாடை - அது என்ன?

2. மொட்டை மாடு உட்கார்ந்திருக்க மூக்கணாங் கயிறு மேய்கிறது - அது என்ன?

3. தெற்கே இருந்து வருது பாரு தேர்க்குச்சிபோல - அது போட்டிருக்கும் நகையைப் பாரு முத்துச் சரம் போல - அது என்ன?

4. குட்டை மரத்தில் கொட்டாப்புளி - அது என்ன?

5. ஒரு கால் மனிதனுக்கு வயிறு நிறைய முட்டை - அது என்ன?

6. சொறியனைக் கறி சமைக்க சோறெல்லாம் கசப்பு - அவன் யார்?


**- மா.கண்ணன், திருநெல்வேலி**

**VII.** 1. மாமா போட்ட பந்தல்; மறுபடி பிரிச்சா கந்தல் - அது என்ன?

2. ஆற்றில் விழுந்தாலும் ஆழ்கடலில் விழுந்தாலும் நனைய மாட்டான் - அவன் யார்?

3. முள்ளுக்குப் பயப்படாத ஜோடி, தண்ணீருக்கு பயப்படும் ஜோடி - அது என்ன?

**- த.மணிமோகன், வெள்ளக்கோவில்**






**I.** 1.எரிமலை, 2.ரேடியோ, 3.கொடி, 4.தீக்குச்சி **II.**1.வாழை, 2.ஆரஞ்சு **III.**1. பாஸ்பரஸ், 2.விஷம், 3.தபால் பெட்டி **IV.**1.சட்டி, 2.தராசு, 3.செக்கு, 4.துடைப்பம் **V.**1.தென்னை, 2.நார்க் கட்டில், 3.பட்டாணி, 4.மின்மினிப்பூச்சி, 5.சிலந்தி, 6.வானம் **VI.**1.வெங்காயம், 2.பூசணிக்காய், 3.வெண்டைக்காய், 4.கத்தரிக்காய், 5.மிளகாய், 6.பாகற்காய் **VII.**1.சிலந்தி வலை, 2.சூரிய ஒளி, 3.செருப்பு



**வௌவால்கள் ஓய்வெடுக்கும்போது தலைகீழாகத் தொடங்குவது ஏன்?**

வௌவாலுடைய கால்கள், அதன் எடையை தாங்க முடியாத அளவு பலவீனமானவை. வௌவால் தரையில் இருந்தால், அது தன் கால்களால் நிற்க முடியாமல், உடலைத் தரையில் தேய்த்து இழுத்துச் செல்லும். அதேசமயம், தலைகீழாகத் தொங்கும்போது அதன் எடையின் பாரத்தை உடலின் மற்ற தசைகள் தாங்கிக் கொள்கின்றன. எனவேதான், வௌவால்கள் தலைகீழாகத் தொங்குகின்றன.

# அனகார்டிக்



**மருத்துவர் ஊசி போடும் முன், ஆல்கஹால் கொண்டு தேய்ப்பது ஏன்?**

ஊசிபோடும் பகுதியில், நுண் கிருமிகள் இருக்கலாம். அவை ஊசி செலுத்தும் சமயத்தில், உடலுக்குள் சென்று விடக்கூடும். அதனால், உடல் நலமும் கெடும். எனவே, தோல் பகுதியில் உள்ள நுண்ணுயிரிகளை அழிக்கவே ஆல்கஹால் பயன்படுத்தப்படுகிறது. அதனால் நுண்ணியிரிகள் நம் உடலினுள் புகுந்து தீங்கு விளைவிப்பதில்லை.

## காரணம்



**முந்திரிப் பழம் சாப்பிட்டால் தொண்டை அரிப்பது ஏன்?**


வெப்ப மண்டலப் பகுதிகளில் வளரும் பயிரான முந்திரியில், நாம் பழம் என்று உண்ணும் சாறுள்ள சதைப்பகுதி, உண்மையில் அதன் பூக்காம்பே ஆகும். இந்தப் பூக்காம்பின் நார்ப்பகுதியில் 'அனகார்டிக் எண்ணெய்' உள்ளது. இந்த 'அனகார்டிக் எண்ணெய்' நாம் முந்திரிப் பழத்தை சாப்பிடும்போது, தொண்டைப் பகுதியில் படிகிறது. முந்திரிப் பழத்தைச் சாப்பிட்டால் தொண்டை அரிப்பதற்கு இதுவே காரணமாகும்.

# எண்ணெய்

**ம.விவேக், குட்டம்.**

**மண் பானையில் உள்ள நீர் எவ்வாறு குளிர்கிறது?**


வீடுகளில் நாம் பயன்படுத்தும் மண் பானையில், ஏராளமான நுண்துளைகள் உள்ளன. பானையில் உள்ள நீர், இந்த நுண் துளைகளின் வழியாக கசிந்து வெளியேறி ஆவியாகிறது. இவ்வாறு தொடர்ந்து நீர்த்துளிகள் ஆவியாவதால், பானையில் உள்ள நீரின் வெப்பம் குறைந்து குளிர்கிறது.



# பயமா?

கதை: கே.ஜே. ஷிஃபானா அஃப்ரின், உ.எண்:913, திருவாரூர்.
படம்: சொக்கலிங்கம்





# வித்தியாசங்களைக் கண்டுபிடி!

மூளைக்கு வேலை

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.





புதுப்புதிய கண்டுபிடிப்புகளை அறிவியல் ஒருபுறம் நிகழ்த்திக் கொண்டே இருந்தாலும், இயற்கையின் ஆச்சரியத்தை அளவிட முடியவில்லை. உதாரணமாக, எரிமலைகளைச் சொல்லலாம்.

சுமார் 32 கி.மீ. உயரம் வரை சாம்பலையும், பாறைகளையும் விசிறியடிக்கும் எரிமலைகள், திடீரென மௌனிக்கின்றன. அவை செயலிழந்தவையா, செயலாற்றக் கூடியவையா என்று முடிவு செய்ய முடியாமல் தவிக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

இத்தகைய எரிமலைகளில் இருந்து வெளியே தள்ளப்படும் பாறைக் குழம்பு 'லாவா' எனப்படுகிறது. அவற்றில் 'சிலிக்கா' எந்த அளவுக்கு இருக்கிறதோ, அதைப் பொறுத்து ஃபெல்சிக், ஆன்டிசெடிக், மாஃபிக் என்று வெவ்வேறு பெயர்களில் 'லாவாக்கள்' குறிப்பிடப்படுகின்றன.

பிசுபிசுப்புடைய இந்த எரிமலைக் குழம்பு, இறுகி பாறைகளாக உருப்பெறுகின்றது. கலிஃபோர்னியாவில் உள்ள லாசன் சிகரம், ஃபெல்சிக் எனப்படும் எரிமலைக் குழம்பு இறுகி உருவானதுதான் என்கிறார்கள்.

1200 டிகிரி வெப்ப நிலையைக் கொண்டு பெருகி ஓடும் நிலையில், இந்த (லாவா) எரிமலைக் குழம்பு வழியில் உள்ளவற்றை முற்றிலும் சாம்பலாக்கி விடுகிறது. இந்த லாவா பயணத்தை 'பைரோகிளாஸ்டிக் ஓட்டம்' என்று குறிப்பிடுகிறார்கள். அலாஸ்காவில் காணப்படும் 'ஆயிரம் புகை போக்கிகள் பள்ளத்தாக்கு' இதற்குச் சரியான உதாரணம்.

இந்தியாவில் உள்ள தக்காணப் பீட பூமி, இத்தகைய எரிமலைக் குழம்பு இறுகியதால் உண்டானது என்கிறார்கள்

# பைரோகிளாஸ்டிக்



## எரிமலை

என்கிறார்கள் புவியியல் வல்லுனர்கள். அப்படி உண்டாகும் பசால்ட் பாறைகளில்தான் உலகப் புகழ்பெற்ற அஜந்தா குகைகள் அமைந்துள்ளன என்றும் சொல்லப்படுகிறது.

எரிமலைகளைப் பற்றிய அச்சம் ஒருபுறம் இருந்தாலும், இன்னொரு புறம் அதன் தொடர்பான ஆய்வுகளும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆங்கிலத்தில், எரிமலையை 'வல்கேனோ' என்கிறார்கள். இது ரோமானியர்களின் நெருப்புக் கடவுளான 'வால்கன்' என்ற பெயரில் இருந்து உருவானது.

பூமியில் மட்டுமல்ல; ஜூபிடர், வீனஸ்... உள்ளிட்ட பிற கிரகங்களிலும் எரிமலைகள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். கவச எரிமலை, ஆழ்கடல் எரிமலை, புதைசேற்று எரிமலை... என்று பலவகையாக கூறப்படும் எரிமலைகள் வெளியேற்றும் நெருப்புக் குழம்பு, சாம்பல், அமிலங்கள் மற்றும் வாயுக்களால் பூமியின் சுற்றுச் சூழல் பெரும் மாற்றங்களை சந்திக்கிறது.

அமிலமழை, காற்றிலுள்ள ஓசோன் படலத்தை அழிக்கும் குளோரின் மோனாக்சைடு உருப்பெறுதல்... போன்ற ஆபத்துக்கள் மட்டுமல்ல; எரிமலைக் குழம்பு, மண்ணில் பரவி நீரில் குளிர்ந்து புதிய தீவுகள் உருவாகவும் காரணமாகின்றன. அதேபோல, மண்ணில் புரதச் சத்து அதிகமாகி பயிர்கள் செழித்து வளரவும் உதவுகின்றன. ●

## ஓட்டம்!







இரா.ரமேஷ்.

## விடைகள் பக்கம்

**I.** (1) ரூ.20/- (2) 782, 1564 (3) 10

**II.** 1) கோலார் 2) புத்தர் 3) அலிப்பூர் 4) குன்றத்தூர் 5) விவேகானந்தர் 6) அருணகிரிநாதர் 7) சமுத்திர குப்தர் 8) திருத் தக்கத் தேவர்

**III.** 1) பஸ், ரயில் 2) மாம் பழம், பீன்ஸ் 3) வெள்ளி, காப்பி 4) தக்காளி, பாய் 5) குருவி, இங்க் 6) விமானம், கார் 7) தங்கம், பேனா 8) பித்தளை, மழை

**IV.** 1) யூரி 2) முகாரி 3) புழலேரி 4) மேரிகியூரி 5) பாண்டிச்சேரி 6) கன்னியாகுமரி

**V.** 1) திடல் 2) பிரேசில் 3) மண்ணீரல் 4) ராயல்மெயில் 5) பக்ராநங்கல் 6) பச்சேந்திரிபால்

# சரியான்னு பாருங்க!



**வித்தியாசங்களைக் கண்டுபிடி!**

1.முயல், 2.மரத்தில் பழம், 3.அணிலின் பல், 4.பூ, 5.பறவை


# அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

**ஆசிரியர் - கோகுலம்**
(டைஜஸ்ட் பகுதி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

**படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!**

# தாயைப் போல, பெண்!



1) வேதியியலில் நோபல் பரிசு பெற்ற பெருமைக்குரியவர்.

2) 1897ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் தேதி பாரிஸில் பிறந்தார்.

3) முதல் உலகப் போரின்போது (1914-1917) இவரது கல்வி பாதிக்கப்பட்டது.

4) போர் முடிந்த பிறகு 1918ம் ஆண்டு விஞ்ஞானியான தனது அன்னைக்கு உதவியாக ரேடியம் நிறுவனத்தில் சேர்ந்தார்.

5) பின்னர் 'ஆல்ஃபா துகள்கள்' குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

6) 1925ம் ஆண்டு அறிவியல் முனைவர் பட்டம் பெற்றார்

7) 1926ம் ஆண்டு, 'ஃப்ரெடெரிக் ஜோலியத்' என்ற இளம் வேதியியல் விஞ்ஞானியை திருமணம் செய்து கொண்டார்.

8) 1932ம் ஆண்டு பாரீஸ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.

9) தனது விடாமுயற்சியால் அறிவியல் துறையில் மேலும் உயர்ந்து 1936ல் பேராசிரியர் ஆனார்.

10) கதிரியக்கம் குறித்த ஆராய்ச்சியிலேயே வாழ்க்கையைக் கழித்த இவர், தன் அன்னையைப் போலவே, ரத்தப் புற்று நோயினால் 1956ம் ஆண்டு மார்ச் 17ல் மறைந்தார்.

இவர் யார்?

விடை : ஐரீன் ஜோலியட் கியூரி

கி.சிந்து.
உ.எண்:786.
ஒன்பதாம் வகுப்பு.
ராஜ் மெட்ரிக்
மேனிலைப்பள்ளி.
மயிலாடுதுறை.



# சுண்டெலியும்

சுவர்ணா நதிக்கரையில் பூதம் ஒன்று இருந்தது. நதியில் நீர் அருந்துவதற்கு வருகின்ற மிருகங்களை எல்லாம் அது கொன்று சாப்பிட்டு வந்தது. பசி எடுக்க ஆரம்பித்தால் அதன் முகம் சிவக்க ஆரம்பித்து விடும்.

நாளடைவில் இதை அறிந்த விலங்குகள் குறிப்பறிந்து விலகி ஓடுவதும் உண்டு. அப்படி அறியாத விலங்குகள் பூதத்திடம் மாட்டிக் கொண்டன.

இதனால், அந்தக் காட்டில் விலங்குகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருந்தது. காட்டுக்கு ராஜாவான சிங்கம்கூட பூதத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை.

இதனால், விலங்குகள் அனைத்தும் ஒன்று கூடி ஆலோசனை நடத்தின. "இப்படியே பூதம் விலங்குகளை அதன் விருப்பப்படி சாப்பிட்டு வந்தால், நம்மில் யாரும் மிஞ்ச மாட்டோம். எனவே சீட்டுப் போட்டு யார் பெயருக்கு விழுகிறதோ அவர் பூதத்தின் உணவாக வேண்டும். இப்படி தினமும் ஒருவர் வீதத்துக்குப் பூதத்துக்கு இரையாக வேண்டும். இல்லாவிட்டால் அனைவருமே அழிந்து விடுவோம்" என்றது கரடி. இந்த முடிவினை அனைத்து விலங்குகளும் ஆதரித்தன. பூதத்திடம் இந்தத் தகவலைத் தெரிவித்தபோது பூதமும் சம்மதம் தெரிவித்தது.



**எஸ். தணிகை வேல்,**
உ.எண்:762,
பன்னிரண்டாம் வகுப்பு,
சி.எஸ்.எம் நகராட்சி
மேனிலைப்பள்ளி,
காஞ்சிபுரம்.

விலங்குகளுக்கு ஓரளவு அச்சம் நீங்கியது. என்றாலும் ஒவ்வொரு நாளும் சீட்டுப் போட்டுப் பார்க்கும் போது யார் பெயர் வருகிறதோ என்று கவலைப்பட்டன.

'சீட்டு எந்த விலங்கின் பெயருக்கு வருகிறதோ, அந்த விலங்கு நதியின் முகத்துவாரத்தில் நிற்க வேண்டும். பூதத்துக்கு எப்போது பசி எடுக்கிறதோ, அப்போது வந்து சாப்பிட்டு விட்டு மீண்டும் அதே இடத்தில் போய் அமர்ந்து கொள்ள வேண்டும்' என்பது விதிமுறை.

அதன்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விலங்கு பூதத்துக்கு இரையானது.

ஒருநாள் ஒரு சுண்டெலி பெயருக்குச் சீட்டு விழுந்தது. 'நாம் பிழைத்தோம்' என்பதுபோல, மற்ற விலங்குகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டு, நதியின் முகத்துவாரத்துக்கு சுண்டெலியை அனுப்பி வைத்தன.

சுண்டெலி மெதுவாக நடந்து, நதியின் முகத்துவாரத்தில் வந்து நின்றது. அன்று பூதத்துக்கு அதிகப் பசி எடுக்க ஆரம்பித்து விட்டது. காத்திருந்து, காத்திருந்து எந்த விலங்கும் வரவில்லையே என்று கோபத்தில் பூதத்தின் முகம் சிவந்தது.

அப்போது, தனக்கு சுண்டெலியே இரையாக வந்திருக்கிறது என்று நினைத்தபோது, அதன் கோபம் மேலும்


நீதிக்கதை
பூதமும்!

பெருகியது. கண்கள் கனலெனச் சிவந்தன. புருவம் வளைந்தது. பற்களைக் கோபத்தில் நறநறவென்று கடித்தது.

பூதத்தின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட சுண்டெலி, "பூதமே, நீ என் உருவத்தை வைத்து எடை போடாதே. என் உடல் சத்து நிறைந்தது. என்னை நீ உண்டால், இன்னும் இரண்டு நாளைக்கு பசியே இருக்காது. ஆனால், பல் படாமல் விழுங்கினால்தான் அது சாத்தியம். உன்னால் முடியுமா?" என்று கூறியது.



பூதத்துக்கு அதிகமாகப் பசி எடுக்க ஆரம்பித்தது. காத்திருந்து, காத்திருந்து எந்த விலங்கும் வரவில்லையே என்ற கோபத்தில் பூதத்தின் முகம் சிவந்தது.

சுண்டெலியின் பேச்சை ஆச்சரியமாகக் கேட்ட பூதம், "அப்படியா, நீ கூறுவது உண்மையா?" என்று கேட்டது.

அதற்கு சுண்டெலி, "ஆமாம்! வேண்டுமானால் நீயே இதைச் சோதித்துப் பார்" என்றது.

உடனே, பூதம் சுண்டெலியின் பேச்சை நம்பி, அதையும் பார்த்து விடலாமே என்ற ஆவலில் வாயைப் பெரிதாகத் திறந்து உடலை அசைத்துச் சுண்டெலியை நெருங்கியது. தக்க தருணம் பார்த்த சுண்டெலி, அதன் வாய்க்குள் பாய்ந்து வயிற்றில் சென்று பதுங்கியது.

அதே வேகத்தில் தன்னுடைய கூரிய பற்களால் பூதத்தின் வயிற்றுப் பகுதியைக் கிழித்தது. பின் பூதத்தின் உடல் முழுவதையும் பற்களால் கடித்துக் குதறியபடியே வெளியே வந்தது.

சுண்டெலியால் சின்னபின்னமாகக் கிழிக்கப்பட்ட நிலையில் பூதம் ரத்த வெள்ளத்தில் துடித்தது. அதன் உடலில் இருந்த ரத்தம் முழுவதும் வெளியேறி நதியை இரத்த ஆறு போலாக்கியது. சுண்டெலி வருவதைக் கண்ட மிருகங்கள் அஞ்சின.

"என்ன நடந்தது, நீ எப்படி உயிர் தப்பினாய்?" என்று கேட்டன; சுண்டெலி நடந்த விவரத்தைக் கூறியது.

இருந்தபோதிலும், விலங்குகள் அதை நம்ப மறுத்தன. அனைத்து விலங்குகளும் நதிக் கரைக்கு வந்தன.

சுண்டெலி கூறியது உண்மை என அறிந்து மகிழ்ந்தன.

சுண்டெலியின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டின.

அன்று முதல் சுண்டெலி காட்டில் மிருகங்களுக்கு ஆலோசனை கூறும் அமைச்சராக நியமிக்கப்பட்டது.

காட்டில் உள்ள அனைத்து விலங்குகளும் சுண்டெலியின் புத்திக்கூர்மையால் நிம்மதியாக வாழ்ந்து வந்தன.

# ஆண்டுக்கு 18 மாதங்கள்!

**அமெரிக்க ஜனாதிபதிகள்**

**அசிரியர் : டாக்டர் ஆர்.நடராஜன் வெளியீடு : மணியம் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி. விலை ரூ.75/-**

பாரக் ஒபாமா அமெரிக்காவின் 44வது ஜனாதிபதி. இவருக்கு முந்தைய 43 ஜனாதிபதிகளைப் பற்றியும், அப்போது நிலவிய சூழல், குடும்பம் என்று அழகான அறிமுகமாக அமைந்திருக்கிறது புத்தகம். அமெரிக்க வரலாறைத் தொடுவது என்றால், கிட்டத்தட்ட உலக வரலாற்றின் ஒரு பகுதியைப் புரிந்து கொள்வது போலத்தான். அதை வெளிப்படுத்தும் நடையில் சரளமும், கிண்டலும், சுவாரஸ்யமும் இயல்பாகவே வெளிப்படுகின்றன. அவசியம் படித்தறிய வேண்டிய புத்தகம்!

**மாயன் நாகரிகம்**

**ஆசிரியர் : எஸ்.எல்.வி. மூர்த்தி, வெளியீடு : ப்ராடிஜி, நியூ ஹாரிசன் மீடியா பிரைவேட் லிமிடெட், 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018. விலை ரூ.25/-**

மெசபடோமிய நாகரிகம், சிந்துவெளி நாகரிகம் மாதிரி, மிகப் பழமையானது மாயன் நாகரிகம். இன்றைக்குச் சுமார் 3000 முதல் 5500 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் இது. மாயர்களின் வானியல் அறிவு, காலத்திறன், எழுத்தறிவு... பற்றிய நல்ல அறிமுகம் இந்த நூல். குறிப்பாக, மாயர்கள் இரண்டு வகை காலண்டர்களை பயன்படுத்தியுள்ளார்கள். அதில் இருபது நாட்களைக் கொண்ட பதினெட்டு மாதங்கள் ஒரு ஆண்டாக கணக்கிடப்பட்டிருக்கிறது. மீதி ஐந்து தினங்கள் அதிர்ஷ்டமற்றவை என நம்பினர் போன்ற செய்திகள் வியப்பும், சுவாரஸ்யமும் தருபவை.

**உயிர்ப் புதையல்**

**ஆசிரியர் : கோவை சதாசிவம்**

**வெளியீடு : வெளிச்சம் வெளியீட்டகம், 1447 அவிநாசி சாலை, பீளமேடு, கோயம்புத்தூர் - 641 004.**

'இயற்கையைச் சிதைக்காதீர்கள்' என்று அறிவுறுத்துவது ஒரு வகை. இயற்கை எப்படியெல்லாம் சிதைக்கப்பட்டிக்கிறது என்பது இன்னொருவகை. இரண்டாவது வகையை அழகாகக் கையாண்டிருக்கிறார் ஆசிரியர். வண்ணப் புகைப்படங்களும், மனதை நெருடுகின்ற 18 கட்டுரைகளுமாக அமைந்திருக்கிறது புத்தகம். 'எதையெல்லாம் இழந்துவிட்டோம் என்பதும் தெரியாமல், எதை இழந்து கொண்டிருக்கிறோம் என்பதும் புரியாமல் நாம் வாழ்கிறோம்' என்பதை அடிமனத்தில் தைக்கிற மாதிரி பதிவு செய்கின்றன கட்டுரைகள்.




**- ராகவன்**


மணியின் பசு!
கதை, படம்: வீரமுடி.
மணி மிகவும் ஏழை. ஒரே ஒரு பசுமாடுதான் அவனுடைய சொத்து. அதன் பாலைக் கறந்து, விற்று தன் தாயுடன் வாழ்க்கையை நடத்தி வந்தான். ஒரு நாள், மாட்டை மேய விட்ட சமயத்தில்...
ஆ... நம்ம மாட்டை பாம்பு கொத்தப் போகுதே...
பெரிய கல்லை எடுத்து குறி பார்த்து வீசினான்.
பயந்த பசுவை தடவிக் கொடுத்து...
நான் இருக்கேன்; பயப்படாதே!
அப்போது, அங்கு வந்த முரடன்...
சின்னப் பயலை ஒரு தட்டு தட்டிட்டு, மாட்டை ஓட்டிட்டு போயிடலாம்.
கம்பினால் அடிக்க...
ஆ... அம்மா...


அதைக் கண்ட பசு, பாய்ந்து வந்து முரடனை முட்டியது.
ஆ... ஐயோ...
முரடன் மயங்கி விழுந்தான்.
தன் வாயால் நீரை கொண்டு வந்து உமிழ...
கண் விழித்த மணி போலீஸ் ஸ்டேஷனில்...
நிஜமாவா? வா, போகலாம்.
காட்டுக்குள்...
அட இவனா?
ஜெயில்லர்ந்து தப்பின மூக்கன். பத்து வருஷமா இவனை தேடறோம். உனக்கு அவார்டு உண்டு.
மறுநாள் நாளிதழில்...
ஜெயிலில் இருந்து தப்பிய மூக்கனை, முட்டிக் கொன்ற பசு!

நெடுங்கவிதை

# எங்கே வாழும்?

புள்ளி வைத்த கோலம் போல
பொலியும் தார கைகள்.
கிள்ளி வைத்த முல்லை போல
கிடக்கும் தாரகைகள்

பகல் விளக்கு சூரிய னும்
பெரிய தார கைதான்!
அகல் விளக்கை இரவில் ஏற்றும்
அழகுத் தாரகைகள்!

குட்டி குட்டி தாரகைகள்
கொட்டி வைத்த காசோ?
சுட்ட தென்று வான மங்கை
சிதறிவிட்ட சோறோ?

சின்னச் சின்ன மீன்கள் போல
மின்னும் தார கைகள்!
தின்ன உதவும் கற்கண்டதன்
துண்டு போலத் தோன்றும்.

நிலவு வரா நாளில்கூட
நிதமும் காண லாமே.
உலகைப் பார்க்க ஆயிரங் கண்
உள்ள னவோ வானில்?

இரவில் லாத பகற் பொழுதில்
எங்கு சென்று வாழும்?
அரிய கல்வி படிக்கப் படிக்க
அறிவியலும் விளக்கும்.



சி. விநாயகமூர்த்தி

# கோகுலம் சிறுவர் சங்கம்

## பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1251. எம்.யஷ்வந்த், நான்காம் வகுப்பு, எம்.ஏ.கே. மெட்ரிகுலேஷன், சென்னை - 23
1252. கே.யாமினி, ஐந்தாம் வகுப்பு, எம்.ஏ.கே. மெட்ரிகுலேஷன், சென்னை - 23
1253. சூரஜ், ஐந்தாம் வகுப்பு, எம்.ஏ.கே. மெட்ரிகுலேஷன், சென்னை - 23
1254. ஏ.மரிய செலஸ்டி, இரண்டாம் வகுப்பு, ஸேக்ரட் ஹார்ட் மெட்ரிகுலேஷன், சென்னை
1255. ஜே.மைக்கேல் கிளமென், மூன்றாம் வகுப்பு, ஸேக்ரட் ஹார்ட் மெட்ரிகுலேஷன், சென்னை
1256. டி.அக்ஷயா, ஒன்றாம் வகுப்பு, அண்ணா ஆதர்ஷ், சென்னை
1257. பி.பரத், நான்காம் வகுப்பு, முஸ்தபா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, சிதம்பரம்
1258. ஜே.பிரவீன்குமார், ஆறாம் வகுப்பு, கிருஷ்ணசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளி, கலாய்பாளையம்
1259. க.பா.மோகன சிவகுமரன், ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீவிநாயகா மேல்நிலைப் பள்ளி, மல்லசமுத்திரம்
1260. ப.சுமதி, எட்டாம் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு
1261. ம.விக்னேஷ் குமரன், எட்டாம் வகுப்பு, விவேகம் மேல்நிலைப் பள்ளி, தாராபுரம்
1262. சி.மதன், எட்டாம் வகுப்பு, சின்னசாமி அம்மாள் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி, திருப்பூர்
1263. சி.லோகேஷ், ஒன்பதாம் வகுப்பு, சின்னசாமி அம்மாள் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி, திருப்பூர்
1264. பா.விஸ்வேஸ்வரன், ஆறாம் வகுப்பு, நோபிள் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, விருதுநகர்
1265. எஸ்.ஷ்யாம் சுந்தர், மூன்றாம் வகுப்பு, பிரசன்டேஷன் கான்வென்ட், கோவை
1266. சு.ஸ்ரீவித்யா, எட்டாம் வகுப்பு, ஸ்ரீவித்யாலயம் மெட்ரிக் பள்ளி, மதுரை
1267. க.பிரகாஷ்ராஜ், நான்காம் வகுப்பு, மீனாக்ஷி அம்மாள் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, உத்திரமேரூர்
1268. எல்.ஏ. நவீனாஸ்ரீ, ஐந்தாம் வகுப்பு, சரஸ்வதி வித்யாஷ்ரம் மெட்ரிக் பள்ளி, கவுந்தப்பாடி





1269. ரா.சதீஷ்குமார், ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

1270. ரா.ஸ்ரீநாத், நான்காம் வகுப்பு, விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தென்பாதி

1271. ரா.ஹரிநாத், ஏழாம் வகுப்பு, விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தென்பாதி

1272. எம்.பாரத் ரத்னம், மூன்றாம் வகுப்பு, இமாகுலேட் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

1273. ச. சதீஷ், ஏழாம் வகுப்பு, ஜ.கா.வி. மேல்நிலைப் பள்ளி

1274. ஆர்.வரலட்சுமி, முதல் வகுப்பு, ஏ.எல்.சி. ஸ்கூல், மங்கலம்

1275. ஆதித்யாராஜன், இரண்டாம் வகுப்பு, செயின்ட் அவிலா, கனடா

1276. ஜே.கவியரசன், எட்டாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

1277. சின்னமுத்து, எட்டாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, உத்திரமேரூர்

1278. பா.இனியன் பாரதி, எட்டாம் வகுப்பு, ஜெயா மேல்நிலைப் பள்ளி, திருநின்றவூர்

1279. ஆர்.ராஜசேகர், எட்டாம் வகுப்பு, நகராட்சி நடுநிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை

1280. கே.பிரகாஷ், எட்டாம் வகுப்பு, ஜெயம் நடுநிலைப் பள்ளி, சோழபுரம்

1281. எஸ்.அபிநயா, மூன்றாம் வகுப்பு, இந்து தொடக்கப் பள்ளி, தூத்துக்குடி

1282. ச.பாலமுருகன், ஒன்பதாம் வகுப்பு, சிங்காரம் பிள்ளை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

1283. ஜி.பாலாஜி, ஒன்பதாம் வகுப்பு, சிங்காரம் பிள்ளை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

1284. அ.கலைவாணி, எட்டாம் வகுப்பு, அரவிந்தர் மீரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை

1285. ந.சித்ரா, பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, சிவலிங்காபுரம்

1286. பெ.லாவண்யா, ஐந்தாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கொழந்தபாளையம்

1287. ரா.ரேகா, ஏழாம் வகுப்பு, ஜானகியம்மாள் மெட்ரிக் பள்ளி, கோவை புதூர்

1288. கு.ஜெய்முருகராஜ், எட்டாம் வகுப்பு, ந.கி.மு. மேல்நிலைப் பள்ளி, சாயிநாதபுரம்

1289. ம.ரிஷபா, ஐந்தாம் வகுப்பு, கொங்குராஜா மெட்ரிக்குலேஷன் பள்ளி, கோவை

1290. கு.தீபக்ராஜ், நான்காம் வகுப்பு, ஆக்ஸ்ஃபோர்டு தொடக்கப் பள்ளி, வேலூர்

1291. செ.முகம்மது சமீர், ஒன்பதாம் வகுப்பு, வேலம்மாள் உ.நி. பள்ளி, சென்னை

1292. பி.சிவசங்கரன், ஏழாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு

1293. க.பாண்டி, எட்டாம் வகுப்பு, ஆர்.சி.தூயமேரி உயர்நிலைப் பள்ளி, அரியலூர்

1294. எஸ்.அஜய்சுந்தரன், முதல் வகுப்பு, விஸ்வபாரதி மெட்ரிக் பள்ளி, மொரப்பூர்

# கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ..............................................

வயது : ..............................................

பெற்றோர் பெயர் : ..............................................

வகுப்பு, பள்ளி : ..............................................

: ..............................................

வீட்டு முகவரி : ..............................................

..............................................

..............................................

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

**இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!**



1295. ஆர்.கோகுல், ஒன்பதாம் வகுப்பு, மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி, சென்னை


1296. பே.அருணாசலம், நான்காம் வகுப்பு, ரோஸ்மேரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி

1297. செ.ச.பாரதி, நான்காம் வகுப்பு, திருவள்ளுவர் தாய் தமிழ்ப் பள்ளி, பல்லடம்

1298. கா.கார்த்திக், பத்தாம் வகுப்பு, அன்பு மெட்ரிக் பள்ளி, கும்பகோணம்

1299. எஸ்.ஜனார்த்தனன், மூன்றாம் வகுப்பு, செயின்ட் மேரீஸ் கான்வென்ட், பம்மல்

1300. எஸ்.கிஷோர்குமார், முதல் வகுப்பு, செயின்ட் மேரீஸ் கான்வென்ட், பொழிச்சலூர்



# கற்பனை

**நா**ம் வாழ்கிற இந்த உலகத்தில் இதுதான் நடக்கும், இது நடக்காது என்கிற கட்டாயங்கள் உண்டு.

ஆனால் கதைகளில் அப்படி இல்லை. அங்கே எதுவும் நடக்கலாம்; எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம்; எந்தக் கட்டுப்பாடும் கிடையாது.

ஒருவிதத்தில், அறிவியலும் இப்படிதான். ஏற்கெனவே இருக்கிற விதிமுறைகளை மீறுவது, புதிய விதிமுறைகளை உருவாக்குவது, பறகு அவற்றையும் உடைத்து எறிவது என்று மிகச் சுவாரஸ்யமான உலகம் அது.

ஜூலஸ் வெர்னெ அப்படித்தான் யோசித்தார். மற்றவர்கள் நிகழ்காலக் கதைகளை எழுதிக்கொண்டிருக்க, இவர் மட்டும் அறிவியல் பின்னணியோடு வருங்காலக் கதைகளை உருவாக்க ஆரம்பித்தார்.

ஃப்ரான்ஸில் பிறந்த ஜூலஸுக்கு, சின்ன வயதிலிருந்தே வீட்டுக்குள் அடைந்து கிடப்பது பிடிக்காது. தன்னுடைய நண்பர்கள், மற்றும் சகோதரனுடன் சேர்ந்து கொண்டு ஊர் சுற்றுவது, புதுப்புது இடங்களைப் பார்ப்பது என்று உற்சாகமாக அலைந்து திரிந்து கொண்டிருந்தார்.

ஒருநாள், அவர்கள் ஊரில் இருந்து கப்பல் ஒன்று இந்தியாவுக்குப் புறப்பட்டது. அதைப்பற்றிக் கேள்விப்பட்டவுடன், ஜூலஸுக்கும் அந்தக் கப்பலில் பயணம் செய்யவேண்டும் என்று ஆசை.

ஆனால், சின்னப் பையன் ஜூலஸ் எப்படித் தன்னந்தனியே இந்தியாவுக்குப் போகமுடியும்? அங்கே போய் என்ன செய்வான்? எங்கே தங்குவான்? உள்ளூர் மொழி தெரியாமல் எப்படிச் சமாளிப்பான்?

ஜூலஸ் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை, ''நான் இந்தியாவுக்குப் போகணும், அவ்ளோதான்'' என்று பிடிவாதம் பிடித்தான்.

''அப்படீன்னா உங்க அப்பாகிட்டே பர்மிஷன் கேளு.''

''ஐயோ, அவர்ட்ட போய் இதைச் சொன்னா அவ்ளோதான், என் தோலை உரிச்சுடுவார்.''

''அப்புறம் எதுக்கு உனக்கு இந்தியா போற ஆசை? பேசாம எல்லாத்தையும்

**என். சொக்கன்**

மறந்துடு.''

''ம்ஹூம், முடியவே முடியாது'', ஜூலஸ் மர்மப் புன்னகை செய்தான். சாகசப் பிரியனான அவனுக்கு, ஒரு யோசனை தோன்றியிருந்தது.

அப்பாவிடம் அனுமதி கேட்டால் தானே பிரச்னை? யாரிடமும் விஷயத்தைச் சொல்லாமல் நானே தனியாக இந்தியா கிளம்பிவிட்டால் என்ன செய்வார்கள்?

அது எப்படி? கப்பலில் பயணம் செய்வதற்கு டிக்கெட் வாங்கவேண்டாமா?

# உலகம்!

இதற்கும் ஜூலஸ் ஒரு வழி யோசித்தான் - ரகசியமாக யாருக்கும் தெரியாமல் அந்தக் கப்பலில் ஏறி ஒளிந்துகொண்டுவிடலாம். கப்பல் இந்தியாவுக்குச் சென்று சேர்ந்த பிறகு, அதே போல் நைசாக இறங்கித் தப்பித்து விடலாம்.

யோசனையெல்லாம் நன்றாகதான் இருக்கிறது. ஆனால், அத்தனை பெரிய கப்பலை ஓட்டுகிறவர்கள் அந்த அளவு ஏமாளிகளாக இருப்பார்களா? கப்பல் புறப்படுவதற்கு முன்பாகவே அவர்கள் ஜூலஸைக் கண்டுபிடித்து வெளியே துரத்திவிட்டார்கள்.

விஷயம் கேள்விப்பட்ட ஜூலஸின் அப்பாவுக்குப் பயங்கர கோபம். அவனைக் கண்டபடி அடித்துத் துவைத்து விட்டார், ''இனிமே இந்த ஊர் சுத்தற கனவையெல்லாம் மறந்துட்டு, ஒழுங்காப் படிப்பைக் கவனிக்கற வழியைப் பாரு!''

அதன்பிறகு, அவன் அப்பாவின் கட்டுப்பாடுகள் மேலும் அதிகரித்து விட்டன. ஜூலஸ் என்ன செய்கிறான், எங்கே போகிறான், யாருடன் பேசுகிறான் என்றெல்லாம் உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பித்தார் அவர். ''மறுபடி ஏதாவது தப்புச் செஞ்சா பெல்ட் பிஞ்சிடும்'' என்று அடிக்கடி பயமுறுத்திக் கொண்டிருந்தார்.


ஆனால், இந்தத் தடையெல்லாம் வெளியில்தானே? ஜூலஸுக்குள் இருக்கும் கற்பனையை யாரால் கட்டுப்படுத்த முடியும்? நிஜ உலகத்தில் விதவிதமாகப் பயணம் செய்யமுடியாத தன்னுடைய ஏக்கத்துக்கு மருந்தாக, அவன் மனத்துக்குள் புதுப்புதுக் கதைகளை உருவாக்கிக் கொண்டிருந்தான்.



இந்த நேரத்தில்தான், ஜூலெஸுக்கு அறிவியல் உலகத்தின்மீது ஆர்வம் பிறந்தது. பலவிதமான விஞ்ஞானிகள், அவர்களுடைய புதுமையான கண்டுபிடிப்புகளைப்பற்றியெல்லாம் வாசித்து மகிழ்ந்தான் அவன்.

அறிவியல் ஆராய்ச்சியும்கூட சாகசம் தானே? ஜூலெஸ் தன்னுடைய கதைகளுடன் அறிவியலைக் கலந்து புதுப்புது விஷயங்களைக் கற்பனை செய்ய ஆரம்பித்தான்.

உதாரணமாக, ஜூலெஸின் கதைகளில் மனிதன் வானத்தில் பறக்கிறான், விண்வெளிக்குப் பயணம் செய்கிறான், ஆழ்கடலுக்குள் போய் வருகிறான், பூமியின் மையத்தை நோக்கிச் செல்கிறான். இன்னும் இப்படி விதவிதமான சாகசங்கள்.



ஜூலெஸ் கதை எழுதிய காலகட்டத்தில், விமானம் கிடையாது; நீர்மூழ்கிக்கப்பல் கிடையாது. இப்படி இன்னும் பல அறிவியல் சாதனங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பாகவே, அவற்றைத் தன்னுடைய கதையில் கற்பனை செய்து உருவாக்கிவிட்டார் ஜூலெஸ் வெர்னெ.

இப்போது, 'இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா' என்று நமக்குத் தோன்றலாம். ஆனால், ஜூலெஸ் கதை எழுதிய காலகட்டத்தில், விமானம் கிடையாது; நீர்மூழ்கிக் கப்பல் கிடையாது... இப்படி இன்னும் பல அறிவியல் சாதனங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்குமுன்பாகவே, அவற்றைத் தன்னுடைய கதையில் கற்பனை செய்து உருவாக்கிவிட்டார் ஜூலெஸ் வெர்னெ.

இந்தக் கதைகள் வெளியான காலத்தில், மக்கள் அவற்றை ஆர்வத்துடன் வாங்கிப் படித்தார்கள், 'எப்படியெல்லாம் புதுமையா யோசிச்சிருக்கார் பாருய்யா' என்று வாயைப் பிளந்தார்கள்.

ஆனால், பின்னாள்களில் அதே விஷயங்கள் அறிவியலின்மூலம் நிஜமானபோது, ஜூலெஸ் வெர்னெயின் மேதைமை, தொலைநோக்குப் பார்வை வாசகர்களுக்குப் புரிந்தது. அவர் சும்மா மூலையில் உட்கார்ந்துகொண்டு மனம் போன போக்கில் யோசிக்கவில்லை, அறிவியல் செல்லும் திசையைக் கவனித்து, அதன் அடிப்படையில் தன்னுடைய புத்திசாலித்தனமான ஊகங்களைக் கதைகளாக்கினார்.

ஜூலெஸ் வெர்னெ தொடங்கி வைத்த அந்தக் கதை உலகத்தில், தடைகள் கிடையாது; கட்டுப்பாடுகள் கிடையாது; எதை வேண்டுமானாலும் கற்பனை செய்யலாம்; எப்படி வேண்டுமானாலும் எழுதலாம்.

ஆனால் அதேசமயம், இந்தக் கதைகள் வெறும் பொழுதுபோக்கு சமாசாரங்களாக மறைந்துவிடுவதில்லை. நமக்குள் அறிவியல் சிந்தனையை ஊக்குவித்து, எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்கச் செய்கிற உன்னதப் படைப்புகள் அவை. இன்று, 'சைன்ஸ் ஃபிக்ஷன்' எனப்படும் அறிவியல் புனைகதைகளின் தொடக்கம் ஜூலெஸ் வெர்னெதான்! அதனால்தான் அவரை 'அறிவியல் புனைகதையின் தந்தை' என்று பாராட்டுகிறார்கள்.

# பிள்ளைத் தமிழ்!

கதை : ராகுல் | குழந்தைக் கடவுள்கள் - 12 | படம் : சொக்கலிங்கம்




எழுந்து அமர்ந்தார்.
யாரந்தச் சிறுவன்? 'அலைவாய்' என்றால்..?
பொழுது விடிந்ததும்..
'அலைவாய்' என்பது என்ன?
என்னிடமே விளையாட்டா கூத்தரே?
ஆ...
என்ன ஆயிற்று?
மீண்டும் வலிக்கிறது
ஓ... இதுவரை வலியில்லை.
கூத்தர் கனவைக் கூற...
வந்தவன் கந்தன்; ஊர், செந்தூர்.
நீ சொல்வது தான் சரி.
திருச்செந்தூர் நோக்கி பயணிக்க...
நடக்க நடக்க வயிற்றில் வலி குறையும் உணர்வு.


திருச்செந்தூர் கடலில் நீராடி...
முருகன் சன்னதியில்...
பிள்ளையாய் வந்தவனே, உன்மீது பிள்ளைத்தமிழ் பாடுகிறேன்.
பாட ஆரம்பிக்கிறார்...
ஆறில் பிறந்தவன்; ஆறு மலர்களில் ஒளிந்தவன்; ஆறு முகம் கொண்டவன்...
பிள்ளைத்தமிழ் தொடர்கிறது.
தொடர்ந்து...
குறவள்ளி பங்கன், நம் மனதுக்குள் தங்க வருகவே..
முடியும்போது...
இந்தப் பதக்கத்தை அளிக்கச் சொல்லி முருகனின் ஆணை!
நோயும் தீர்த்து பரிசும் தந்த பரம குருவே!
திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் பிறந்தது இப்படித்தான்!


# பார்க்க:


ஹலோ... மழையே
இல்லை; இங்கே:
தொத்திகிட்டு வரலாம்னா
ஜெட் ஏர்வேஸ்
வேற ஸ்டிரைக்
என்ன பண்றது!


தைரியமா
கிட்ட வருதே?
விஷ எலியா?
இது கடிச்சா
எலிக் காய்ச்சல்
வருமோ?


ஐய... நல்லாவே
இல்லையே...
ஸ்டிராபெரியா
இருந்தா
நல்லாருக்கும்.




தூக்கம்தான் எங்களோட பவரு; கண் முழிச்சு எந்திரிச்சா, கட்ட இல்லை கயிறு!

# சிரிக்க...


அடப்பாவிகளா... ஸீரியலைப் பார்த்தா நம்ம மேலயே நமக்கு சந்தேகம் வரமாதிரியிருக்கே...


ஏய்... நில்லு நான் இருக்கேன் முன்னாலே...



# பட்டாசு இல்லாத

நளினி சம்பத்குமார்

''அடுத்த வாரம் தீபாவளி. இந்த வருஷம் தீபாவளிய ஜமாய்ச்சிடனும். இந்த அப்பார்ட்மென்ட்டிலேயே அதிகமா வெடி வெடிச்சது நானாத் தான் இருக்கனும். அம்மா ப்ளீஸ்ம்மா. சீக்கிரமே லிஸ்ட் போட்டு அப்பாவ பட்டாசு வாங்கி தர்றச் சொல்லும்மா.''

காலையிலிருந்தே தன் அம்மாவிடம் பெட்டிஷன் போட்டுக் கொண்டிருந்தான் ஷ்யாம். அம்மாவும் அப்பாவும் இந்த வருஷம் பட்டாசுகள் இல்லாத தீபாவளியா கொண்டாடனும்னு நினைச்சிருந்தது. பாவம் ஷ்யாமுக்கு தெரியாது. அப்பாவே அவர் வாயால் அந்த சொல்லட்டும்னு அவங்க அம்மா விட்டுடாங்க...

சாயந்திரம் அப்பா அலுவலகத்திலிருந்து வந்ததுமே ஷ்யாம் ஆரம்பித்தான்! ''அப்பா இன்னிக்கு கடைக்கு போய் பட்டாசெல்லாம் வாங்கிடனும். பாருங்க என்னோட ஃபிரெண்ட்ஸ் எல்லாம் இப்பவே வெடிக்க ஆரம்பிச்சிட்டாங்க. நான் இன்னும் கேப் கூட வெடிக்காம இருக்கேன். சீக்கிரமா கிளம்புங்க. நான் ஹோம் ஒர்க் எல்லாம் கூட சீக்கிரமா செஞ்சு முடிச்சுட்டேன். கிளம்புங்கப்பா ப்ளீஸ்'' என கெஞ்சினான் ஷ்யாம்.

'ஷ்யாம் கண்ணா, நீ சொல்றது சரி தான்... உன் ஃபிரெண்ட்ஸ் எல்லாம் வெடிக்கறதைப் பார்த்தா உனக்கு ஆசையாத்தான் இருக்கும்.. இல்லேன்னு சொல்லலை.... இந்த டமால் டுமீல் சத்தம்; அப்பறம் இந்த புகை இதனால எல்லாம் எவ்வளவு கெடுதல் வருது தெரியுமா.. நம்ம வீட்டையே எடுத்துகோயேன்..தாத்தா பாவம்.. ஆஸ்த்துமாவால கஷ்டப்படறவர்.. இந்த தீபாவளி வெடி, புகை எல்லாம் சேர்த்து அவருக்கு இருக்குற ஆஸ்த்துமாவை இன்னும்

## அறிவுரைக் கதை

# தீபாவளி!

அதிகமா ஆக்கிடுது..... பாட்டி பாரு காதுலேர்ந்து கையே எடுக்காம உட்கார்ந்திருக்கா.. நம்ம வீட்டு நாய்க்குட்டி ஜுஜுவ பாரு, எப்படி மிரண்டு போய் உட்கார்ந்திருக்குன்னு... இவங்க எல்லாரையும் கஷ்டப்படுத்திட்டு நாம சந்தோஷமா வெடி வெடிக்கனுமா சொல்லு... எல்லாம் ஒரு பத்தே பத்து நிமிஷ சந்தோஷம் அவ்வளவு தான்.. எல்லா வெடியும் கடைசில வெறும் கரித் தூளா தான போகுது... கொஞ்சம் யோசிச்சு பாரு...'' அவனை மடியில் உட்கார வைத்து கொண்டு மெதுவாக சொன்னார் அப்பா.

''போங்கப்பா.. என் தீபாவளி மூடையே நீங்க ஸ்பாயில் பண்ணீட்டீங்க.. தாத்தாவுக்கு ஆஸ்துமான்னா அவர அவர் ரூம்ல போய் இருக்க சொல்லுங்க... பாட்டி காத பொத்திண்டு உட்கார்ந்திருக்காங்கன்னா உட்காரட்டுமே.. ஜுஜு தீபாவளி சமயத்துலேயாவது அங்கேயும் இங்கேயும் ஓடாம உட்கார, தீபாவளி பட்டாசு ஹெல்ப் பண்றது..எனக்கு என் பட்டாசு வேணும்.. நான் கொஞ்சமா வெடிக்கறேன்.. ஒரு பத்து ராக்கெட், 100 வாலா 4, 15 பாக்கெட் பாம். இது போதும் இந்த வாட்டி, பிஜ்லி கூட வேணாம், ஓகேயா' என அப்பாவிடம் சொன்னான் ஷ்யாம்...

வெளியே வெடிச்சத்தம்; வீட்டுக்குள் ஷ்யாம் சத்தம்! அப்போதுதான் கேட்டது அந்தக் குரல்! 'அச்சச்சோ போச்சே.. யாராவது இங்க ஓடியாங்களேன்'

தங்கள் வீட்டில் வேலை செய்யும் மங்கம்மாவின் குரலைக் கேட்டு, பதறியடித்து கொண்டு ஓடினார்கள் அனைவரும். அவன் வீட்டுக்கு பின்புறம் இருந்த மங்கம்மாவின் குடிசை தக தகவென தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து பயந்தே போய் விட்டான் ஷ்யாம்..

சற்று நேரத்தில் போலீஸ் ஜீப், ஃபயர் இன்ஜின் என ஒரே களேபரமாகி விட்டது..

''யாரோ எங்கேயிருந்தோ உட்ட ராக்கெட் பாருங்க நேரா வந்து பாவம் மங்கம்மா வீட்டு குடிசைலயா வந்து விழணும். வருஷா வருஷம் இந்த தீபாவளின்னு வந்தாலே அங்கங்க ஏகப்பட்ட குடிசைங்க தீ பிடிச்சுக்குது. ரோட்ல ஓரமா நடந்து போறவங்க மேல பட்டாசு வந்து விழுந்து அவங்களுக்கு தீ காயம் பட்டுடறது... என்ன செய்ய. தீபாவளின்னாலே 'தீ' வலியா ஆகிப்போச்சு' என கூட்டதில் யாரே இருவர் பேசி கொண்டு போனது ஷ்யாமை என்னவோ செய்தது.


தீ அணைக்கப்பட்ட நிலையில், வீட்டினுள் நுழைந்த ஷ்யாம் சொன்னான்: ''அப்பா, இந்த வருஷத்துல இருந்து நம்ம வீட்ல 'நோ' பட்டாசு! ஒன்லி மத்தாப்பு!''

அவனது மனமாற்றம் அங்கே ஆனந்தத்தை பரப்பியது. ●



விந்தை

# கணினிக்குப் பிறகு கற்காலம்!



டினோஸர்கள் என்னும் ராட்சத மிருகங்கள் மிகப் பழங்காலத்தில் இருந்தன. இயற்கையின் சீற்றத்தால் அவை மறைந்தன என்று நில நூல் மற்றும் உயிரின ஆய்வாளர்கள் கூறுவதைப் படித்திருக்கிறோம். அதேபோல, இன்னும் சில கோடி ஆண்டுகளில் - விசித்திரமான விலங்குகள் தோன்றும் என்கிறார்கள் உயிரியல் ஆய்வாளர்கள்.

அதாவது, மனிதர்கள் இந்த பூமியில் வாழப் போவது இன்னும் சில கோடி ஆண்டுகள்தான் என்பது அவர்களின் முடிவு. அதற்குப் பின், பூமியில் ஆச்சர்யப்படத்தக்க வடிவுடன் கூடிய விலங்குகள் உலவும் என்கிறார்கள்.

'நீண்ட கால்களைக் கொண்டதாக, ஆறடி உயரத்துடன் முயல்கள்; காண்டா மிருகம்போல பருமனைக் கொண்ட பெரும் மான்கள்; முப்பது அடி உயரத்துக்கு விஷத்தை பீய்ச்சியடிக்கின்ற பாம்புகள், வௌவாலிலிருந்து 'நைட் ஸ்டாக்கர்' (Night Stalker) எனப்படும் விசித்திரமான விலங்கு... என பல்வேறு விலங்குகள் தோன்றும்' என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

தீவுகள், வெப்பமண்டலப் பகுதிகள், பாலைவனங்கள், புல்வெளிகள், துருவப் பகுதிகள் என்று அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற மாதிரி, இந்த உயிரினங்கள் தோன்றும் என்று யூகிக்கிறார்கள். அப்படியானால், கணினிக்குப் பிறகு கற்காலம்; மீண்டும் அதிலிருந்து ரோபோ... என தொடருமோ?



- த.பிரகல்யா,
உ. எண் 318,
தஞ்சாவூர்

# கடித மாலை

● 'காணாமல் போன நிழல்' படித்தவுடன் மிகவும் வியப்படைந்தேன். நவீன வசதிகள் எதுவும் இல்லாத காலத்தில் பூமி கோளம் என்பதை நிருபிக்க எரடாஸ்தனிஸ் மேற்கொண்ட முயற்சி மெய்சிலிர்க்கச் செய்தது. - **கே.எஸ்.யோகேஸ்வரன், உ. எண் 146, திருச்சி**

● புதிர்கள் பகுதி எல்லோரும் விரும்பிப் படிக்கும் வகையில் இருக்கிறது. அதுவும் கணக்குப் பகுதியைச் செய்யவே ரொம்பவும் ஆசையாக இருக்கிறது. - **ஆர்.பி.இரமணி, மதுரை**

● 'பயம் வேண்டாம்' என தெளிவுபடுத்தி அசத்திவிட்டீர்! கோகுலம் இதழின் அனைத்து பக்கங்களும் பயனுள்ளதாகவும், அறிவுச் சிற்பிகளாக்க துணை நிற்பதாகவும் இருக்கிறது. - **ஆர்.இராஜேஸ்வரி ராமகிருஷ்ணன், ஏரகுடி**

● இந்த மாதம் சிரிப்பலை பகுதியில் வந்தவை அனைத்தும் வித்தியாசமாக இருந்தன. - **ந.பிருந்தா, உ. எண் 1098, மயிலாடுதுறை**

● இலக்கியத் தேன் சொட்டச் சொட்ட இனியதோர் கவிதையை விடுகதையாக்கி விடை கண்டு பரவசப்படுத்திய 'புலவர் போட்ட விடுகதை' பிரமாதம்! - **ஆர்.கே.கார்த்திக், மணலிவிளை**

● சம்பவம் பகுதியில் பிரபலங்களைப் பற்றிப் படிக்கும்போது, அவர்கள் எவ்வளவு புகழ் வாய்ந்தவர்களாக இருந்தாலும் எவ்வளவு எளிமையாக, அடக்கமாக இருந்திருக்கிறார்கள்? எவ்வளவு அறிவு வாய்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது புரிகிறது. - **பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை**

● கோகுலம் இதழில் வரக்கூடிய ஒவ்வொரு கதையும் அருமையாக உள்ளது. பல நல்ல செய்திகளும் படிப்பதற்கு பிரயோஜனமாக இருக்கிறது. - **அஷ்ரப் அலி, திருவள்ளூர்**

● 'எங்கள் ஊர்' பகுதியின் மூலமாக எங்கள் மதுரையைப் பற்றிப் பல விஷயங்களைப் படித்தபோது மனதுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது. - **எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை**

● அறிவுக்கு உரமாகும் அறிவியல் தகவல்கள் அனைத்துத் தரப்பினருக்குமே அத்யாவசியமானவை. டாக்டர் பக்கம் - மிகவும் பயன் தருவதுடன் முன் எச்சரிக்கையாகவும் இருக்க உதவுகிறது. - **வளர்மதி மனோதாஸ், கன்னியாகுமரி**

● பன்றிக் காய்ச்சல் பற்றிய பயம் வேண்டாம் தலையங்கம் படித்தவுடன் மனதிற்குள் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. ஏனென்றால் எங்கள் வீட்டில் காய்கறிகள், பழங்கள், பூண்டுகளைச் சேர்த்துக் கொள்வோம். அதனால் நமக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும் என்று நிம்மதி கிடைத்தது. - **ஆர். அம்பிகா, மதுரை**

● ஆறு வயதில் தூரிகை பிடிக்க ஆரம்பித்து ஓவிய உலகில் வெற்றிப் பேரிகை முழக்கும் அர்ஜுனின் படங்களும் தொகுப்பும் அவரது வண்ணங்கள் போன்றே ஜில்லிட்டன. - **த.சந்தனக்குமார், வி.எம்.சத்திரம்.**

# வியக்க வைத்த முயற்சி!



# விடையைச் சொல்; பரிசை வெல் - 28

1. அதிக நேரம் தூங்கும் விலங்கு ..........................................

2. 'காபியில் மோனாலிசா' வரைந்த திருவிழாவின் பெயர் ......................

3. ராக்கெட்டை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்ட ஆங்கில படைத் தளபதி ..................................

4. 'ஆயிரம் புகைபோக்கிகள் பள்ளத்தாக்கு' உள்ள இடம் ......................

5. 'செங்கிஸ்கான்' என்ற சொல்லின் பொருள் ..........................................

**என் பெயர்** : ..........................................

**வகுப்பு, பள்ளி** : ..........................................

: ..........................................

**வீட்டு முகவரி** : ..........................................

..........................................

பின்கோடு ..........................................

போட்டி

**பரிசு ரூபாய் 1000/-**



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 30.10.2009

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

# கோகுலம் சிறுவர் சங்கம்

## உறுப்பினர்கள்


1276


1277


1278


1279


1280


1281


1282


1283


1284


1285


1286


1287


1288


1289


1290


1291


1292


1293


1294


1295


1296


1297


1298


1299


1300

யர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

